திராவிட மாணவர் மலர்

Regd. No. M. 4593. KUDI ARASU 16 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரு. 0-1-6

வருட சந்தா ரு. 5. சனி வெளியீடு.

மலர் 18 } சனிரோ, 10-2-1945 தை-மீ 28உ { மலர் 18

இந்துமதத்தில் [ஆரியத்தில்] பெண்கள் நிலை

புரபசர் இந்திரா M.A., (சாஸ்திரி-காவ்யதிருத், வித்தியாலங்கார் M. O. L. முதலிய பட்டம் பெற்றவர்) எழுதிய பழைய இந்தியாவில் பெண்கள் நிலை என்னும் புத்தகத்தில் 11ம் பக்கம் முதல் 26ஆம் பக்கத்திற்குள் உள்ளவற்றில் இருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டதாகும் அதாவது அவர் பெண்களைப் பற்றி இந்துமத ஆதாரங்களான வேத சாஸ்திர புராண இதிகாசங்கள் ஆகியவைகளிலும் பண்டைய அரசநீதியிலும் காணப்படுபவைகளை தொகுத்து குறிப்பிட்டிருப்பதாவது:-

1. 'பெண்கள் நிலையற்ற புத்தி படைத்தவர்கள் அவர்கள் நம்பத் தகாதவர்கள்'

—ரிக்வேதம் 8-3-17

2. 'பெண்கள் கட்பு நீடித்ததல்ல, அவர்கள் கழுதைப்புலியின் மனதையுடையவர்கள்'

ரிக்வேதம் 10-95-10

(ஊர்வசி புரூரவ முனிவருக்குச் சொன்னது)

3. 'இந்திரன், நாம் விரும்பும் மனைவிகளை கொடுப்பவன்'

ரிக்வேதம் 4-17-16

(இந்திரனை ரிஷிகள் பிரார்த்திப்பது)

4. 'இந்திரா! உன்னைவிட மேலானவன் வேறுயாருமில்லை; ஏனெனில், மனைவியில்லாதவருக்கு மனைவிகளை-காதல் கிழத்திகளைத் தருகிறாய்'

ரிக்வேதம், 5-31-3

5. 'வேதகாலத்தில் போரிலே [illegible] அளிக்கும் பரிசுப் பொருள்களில் ஒன்றாகப் பெண்கள் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள்."

6. "வெற்றிக்குப்பிறகு வெற்றியாளர்களால் பெண்கள் கணவரிடமிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டு கொள்ளைப் பொருள்களைப் போல் பங்கு போடப்படுவார்கள்"

—(பேராசிரியர் லட்விக் கூறுகிறார். இவைகளுக்கு வேதங்களில் ஆதாரம் இருக்கிறது என்று)

7. "ஸ்திரீகள், அலங்காரம் செய்யப்பட்டு வெற்றி வீரர்கள் தங்கியிருக்கும் முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்"

—ரிக்வேதம், 8-46-33

8 "வேதங்களின் காலத்தில் பெண்கள் ஆண்களின் உடைமை போல்—சொத்துபோல் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்"

(புத்தக ஆசிரியர் கருத்து)

9. பொதுவான கணவன் ஒருவன் தன் காதல் கிழத்திகளை வைத்திருப்பதுபோல் தான் கைப்பற்றிய கோட்டைகளை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்" ரிக்வேதம், 7-2-63

(இந்திரன் சொல்லியிருக்கிறார்)

10. 'இதே கொள்கையை தான் பின்னால் சட்டம் செய்தவர்களும் காவியங்கள் இயற்றியவர்களும் கையாண்டிருக்கிறார்கள்."

(புத்தகாசிரியர்)

11. "உடமைகளில் ஒன்றாக பெண்களை மனிதன் கொள்ள வேண்டும்."

12. "மூன்று பொருள்களை அதாவது செல்வத்தை, புத்தகங்களை, பெண்களை வேறொருவன் ஆதிக்கத்தில் விட்டுவைக்காதே."

(யக்ஞ்யவல்க்கியர் என்பவரால் வகுக்கப்பட்ட தர்மநீதி)

13. "வேதசாஸ்திர கட்டளைப்படி, புருஷர்கள் தங்கள் மனைவிகளை, பூர்வீக புண்யத்தினாலோ அல்லது தெய்வசங்கல்பத்தாலோதானடைந்த பொருளாகவே கருதவேண்டும்"

—பீஷ்மர் கூறிய வாக்கு.

14. 'பெண்கள் தங்கள் கௌரவத்தைப் படிப்படியாக இழந்து ஆண்களின் போகப் பொருளாக மாறிவந்ததை வேதங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்'

(புத்தகாசிரியர்)

15. 'ஒரு கணவன், தன் மனைவியைத் தனக்கு தொண்டு செய்யவும், பிள்ளைகளைப் பெறவும் கடவுளால் கொடுக்கப்பட்டவள்' என்று அதர்வண வேதத்தில் உள்ள ஒரு பாட்டிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

16. 'மேலும் அவள் (கணவனால்) அவனுடைய போஷ்யா அல்லது அடிமை கீழ்ப்பட்டவள் என்று அழைக்கப்பட்டவள்'

—அதர்வணவேதம், 14-1-52

17. 'பிற்காலத்திலும் பெண்கள் போகத்திற்குறியவர்களாக மாத்திரம் கருதப்பட்டு வந்திருக்கிறது.'

(புத்தகாசிரியர்)

18. 'மனிதனுக்கு இன்பத்தை யளிக்கவே—காம வேட்கையை தணிக்கவே பெண்கள் பிறந்திருக்கிறார்கள்'

(என்று உபநிஷதர்கள் நினைத்து வந்திருக்கிறார்கள்)

19. 'மனிதன் தனக்கு உதவிக்காக [illegible]

ரோஜா முத்தையா

டையாக தன்னுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய-தனக்கு எல்லாம் இன்பத்தையும் தரக்கூடிய ஒன்றை மனைவி என்ற உருவத்தில் பெற்றான்'

—பிருஹதாரன் யாக, 1-4

20. 'பின்னால், தர்மசாஸ்திரங்களில் பெண்களின் நிலை, இகழ்ச்சியையுண்டு பண்ணும் கீழான நிலைமைக்குப் போய் விட்டதைக் காணலாம்'

ஆசிரியர் கருத்து.

21. 'அறிவுக்குப் பொருந்தாத முறையில் அவர்கள் மீது இழிவுகள்-வசைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு அளவேயில்லை'

ஆசிரியர் கருத்து

22. 'பெண் குலத்தை இழிவுப்படுத்துவதில்-தாய் குலத்தை இழிவுபடுத்துவதில் மகாபாரதமும் காவியங்களும் சிறிதும் பின் வாங்கவில்லை'

ஆசிரியர் கருத்து.

23. 'பெண்களைத் தட்டு முட்டுச் சாமான்களைப்போல் கருதப்படுவதால் அவர்களைப் பற்றி அதிகமாக கவலை கொள்ளத் தேவையில்லை'

(இதற்கு ஆதாரங்கள் பல உண்டு)

24. மனு சொல்லுவதைக் கவனியுங்கள்:-

'இந்த உலகில், ஆண்களை கற்பழிக்கும் இயல்பை பெண்கள் பெற்றிருப்பதினால்தான் புத்திசாலிகள் பெண்களுக்கு மத்தியில் தற்காப்புடன் இருக்கவேண்டியவர்களாகிறார்கள்'

மனு, 2-213

25. 'இந்த உலகில், படித்த ஆண்களையும் பெண்கள் வசியப்படுத்தி-தப்பான வழியில் செலுத்தி இச்சைக்கும் போகத்திற்கும் அடிமையாக்கிவிடுவார்கள்'

ஷை. 2-214

26. 'மனு, பெண்களுக்குப் போகத்தில் ஆசை, கலையில் ஆசை, இருப்பில் ஆசை அசூயைகளைக் கற்பித்ததோடு ஒழுக்கமுள்ள சிந்தனையும், கோபத்தையும், அயோக்கியத்தனத்தையும், வஞ்சகத்தையும், துர் நடத்தையையும் பெண்களின் லட்சணமாக வர்ணித்திருக்கிறார்'

(புத்தகாசிரியர்)

27. 'பெண்ணினத்தின் மீது பாம்பு விஷத்தைச் சொருகுவதாகிய இப்பெரும் காவியம் இழிவைக் கக்குகிறது—கொட்டுகிறது.'

மஹாபாரதம் அனுசாசனம் 38-12, 15,29.

28. 'பெண்ணாய் பிறப்பதை விட கெட்ட பிறப்பு வேறு எதுவுமில்லை.'

'எல்லா கேடுகளுக்கும் வேர் பெண்களே'

29. 'எவ்வளவு விறகினாலும் நெருப்பு திருப்தி அடைவதில்லை.

ஆறுகள் கொண்டுவரும் எந்த அளவு நீரினாலும் கடலுக்கு ஆசை தீருவதில்லை.

எவ்வளவு பிராணிகளைக் கொன்றாலும் கொலைகாரன் சமாதானம் அடைவதில்லை.

இதுபோல பெண்கள் எவ்வளவு ஆண்களாலும் திருப்தியடைந்துவிடமாட்டார்கள்'

30. 'நாசகாலன், வழிக்காற்று பாதாளக் கடவுளாகிய எமன், இடைவிடாமல் நெருப்பைக் கக்குகின்ற அக்கினி, கூற்றுவாய், க்ஷவரக் கத்தியின் கூர்மை, கொடிய விஷம், பாம்புகள், நெருப்பு ஆகியவைகள் ஒன்று சேர்ந்தால் எத்தனை கேட்டை விளைவிக்கக் கூடியதாகுமோ அத்தன்மையையுடையவர்கள் பெண்கள்'.

—பாரதம் அனுசாஸன பருவம்

31 'இதிகாசங்கள் காலத்தில் இருந்த சாதுவாகிய மன்னன் யுதிர்ஷ்டனனும் பெண்களின் இயல்பை மிகக்கேவலமாக—வெறுக்கத்தகுந்த முறையில் கண்டித்திருக்கிறார்'

(புத்தகாசிரியர்)

32. அதாவது:- 'பெண்ணின் அறிவுகளைக் கண்டுபிடிக்க முடியாது. ஆழ்மனது அவ்வளவு தந்திரமுள்ளது'

மகாபாரதம் அனுசாசன பர்வதம், 39-8

33. 'பெண்களின் அறிவைப் பார்த்துதான், பிரகஸ்பதியும் இதர பெரும் அறிவாளிகளும் அறிவுக்கான கொள்கைகளை வகுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது'

ஷை. 39-40

34. 'பெண்ணைவிட, பாவகரமான பிராணி வேறு இல்லை. பெண் எரிகிற நெருப்பு போன்றவள்; பெண் மாய்கை (வஞ்சக) ஞானமுள்ளவள், க்ஷவரக் கத்தியின் கூர்மையான முனை போன்றவள். இவைகள் எல்லாம் உண்மையாகவே ஒரு பெண்ணின் தன்மையில் இருக்கின்றன'

ஷை. 43-22.

35. 'பெண்கள் பயங்கரமானவர்கள். கொடிய சக்திகளை உடையவர்கள். தங்களுக்குப் போக இன்பத்தையளிக்கிறவர்களிடத்தில் தவிர வேறு யாரையும் அவர்கள் நேசிக்கவுமாட்டார்கள் விரும்பவுமாட்டார்கள்'

ஷை. 43-23.

'உயிரைக் கொல்லும் அதர்வன மந்திரங்களை ஒத்தவர்கள் பெண்கள்'

ஷை. 43-24.

'ஒருவனுடன் கூடி வாழ ஒத்துக் கொண்டாலும், பின்னர், மற்றவர்களுடன் கூடிக்கொண்டு முன்னவனை விட்டுப் பிரியவும் தயாராகவுமிருப்பார்கள்'

ஷை. 43-24

'அவர்கள் ஒரு ஆணைக் கொண்டு எப்பொழுதும் திருப்தியடையமாட்டார்கள்'

ஷை. 43-24

'ஆண்கள் அவர்களை நேசராகக்கொள்ளக் கூடாது, அவர்களிடம் பெருமைப்படக் கூடியது (நல்ல தன்மை) ஒன்றுமில்லை. அவர்களுடன் தொடர்பு இல்லாமலே, உண்மை அன்பு வைக்காமல் போகத்துக்கு ஆக மாத்திரம் ஆண்கள் பெண்களின் சம்பந்தத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் படிக்கு அல்லாமல் வேறுவிதமாக ஒருவன் பெண்ணிடம் நம்பிக்கை வைத்து நடந்துகொண்டால் அவன் நிச்சயமாக அழிந்துபோவான்'

ஷை. 43-24

40. 'எல்லா மனிதர்களும் கடவுள்களாக இருந்ததைக் கண்டு தேவர்கள் பயந்து பாட்டனிடம் சென்றார்கள். பாட்டன் இவர்கள் மனதிலுள்ளதை அறிந்து, மனிதர்களின் வீழ்ச்சிக்காக பெண்களை சிருஷ்டிசெய்தார்'

41. 'ஆகவே, பெண்கள் மனித சமுதாயத்தின் வீழ்ச்சிக்காக பிறந்தவள் என்று நம்பப்படுகிறது'

42. 'பெண்கள் உறுதியான பலம் இல்லாதவர்களானதால், அவர்கள் நிலையற்ற-ஸ்திரமற்றவர்கள் என்று கருதப்படுகிறது'

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

துடிக்கும் இளமை!

மு. கருணாநிதி, ஆரூர்.

தலைவரே! தாய்மாரே! திராவிட மாணவமணிகளே! வணக்கம், இந்த ஆண்டு விழாவிலே நான் பேசவேண்டியது துடிக்கும் இளமை! துடிப்பு எல்லைக்கோட்டைத் தாண்டிவிடுவதும் உண்டு. அஃது என் குற்றமல்ல.

துடிக்கும் இளமை! ஆம், இளமை துடிக்கிறது. கோலநிலா வந்து கொஞ்சுகின்ற இரவில் காதலன் துடிக்கிறான். காதலி வரவில்லை. அவளுக்கு வீட்டிலே கட்டுப்பாடு அப்படி! மற்றநாடுகளின் நிலைகண்ட அளவிலே நிலா கண்ட காதலனின் நிலைபெற்ற இளமைக்கு, பெரியார் இருக்கும்போழுதே திராவிட நாட்டுக் குடிமகனாக வாழவேண்டுமென்ற ஆவல் துடிக்கிறது. துடிப்பது ஆவல் மட்டுமல்ல! ஆரிய அரசுகளோடு ஆத்திரமுங்கூட, திராவிடர் நிலைகண்டு இரக்கமிருப்பினும் "இனத்திற்கு இழுக்கு விளைக்கும் இழிமகனே! நாட்டை வருத்தற்குமுன் இறந்து போ!" என்ற எச்சரிக்கைகளெழுப்பும் பாசறையாக உள்ளது இளைஞர் இதயம்! அமைதியோடு செயல்புரியும் ஆற்றல் இல்லையா என்று அஹிம்ஸா பிம்பங்கள் வினவலாம். கலிங்கத்தை வென்ற பிறகுதான அசோகனுக்கு அமைதி ஏற்பட்டதாம். மதவாத மடமையை மஞ்சத்திலமர்த்தி, முதலாளிக் கொடுமையை முத்தமிட்டுக் கிடந்த ஜாரும் ஈன்புடனும் சாய்ந்த காரணம் சாந்த குணம் படைத்த லெனினால் அல்ல. உத்வேகத்தால் உந்தப்பட்ட ஓர் புரட்சிக்கார லெனினால்தான் அது முடிந்தது. ரஷ்யாவிலே தொழிலாளர் துயர் துடைத்தது துடிப்பின் முடிவு என்பதை யாரே மறுக்க முடியும். கடவுள்கள் கூட அஹிம்சையோடு நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. சிவன் கையிலே சூலமும், விஷ்ணு கையிலே சக்கரமும், முருகன் கையில் வேலும், இராமன் கையில் வில்லும் இருப்பதாக எழுதப்பட்டுள்ள சித்திரங்களையாவது அஹிம்ஸா அன்பர்கள் பார்க்கட்டுமெனக் கூறி, இழந்த உரிமைமைப்பெற துடிப்பு தேவைதான் என்பதை வலியுறுத்தி மேற் செல்லுதும்.

இந்தத் துடிப்பு திராவிடத்தில் ஏற்படக் காரணம் என்ன? அநீதியை அணைத்து வாழ்ந்த அரசியல், ரஷ்யாவிலே புரட்சிக்குக் காரணமாயிருந்தது. போப்பாண்டவரின் போலி வேடங்கள் மார்ட்டின் லூதரைக் கிளர்ச்சியில் இறங்கவைத்தன. கொடுமையும், குருமார்களின் கோணல் நடத்தையும் பதினாறாம் [illegible]யின் ஆட்சியும் பிரஞ்சிலே ரத்தப் புரட்சியை உண்டாக்கியது. இன்றைய திராவிடத்திலே மாணவ உள்ளங்கள் கொதிப்பேறுவதற்குக் காரணம் ஒன்றல்ல! இரண்டல்ல! ஓராயிரமுண்டு!

கண்ணில்லாதவனுக்குக் காதாவது கேட்கவேண்டும் அது போகட்டுமென்றால் பேசவாவது இயல்பிருக்கவேண்டும். அதுவுமில்லையென்றால் கால் கைகளாவது சரியாக இருக்கவேண்டும். அதுவுங்கிடையாது. இதே நிலைதான் திராவிடர் வாழ்விலும் அமைந்துள்ளது. வாழ்விலே சமத்துவமுண்டா? வள்ளுவரும், வடலூராரும், புத்தரும், சித்தரும் சமத்துவத்தைப் பரப்பியிருந்தும், அதுவே நமக்குத் தேவையும் அவசியமும் அவசரமுமானதாகத் தெரிந்திருந்தும் சமத்துவ உணர்ச்சிக்கு சாவுமணி அடிப்பவர்களைக் கண்டு சீற்றமடையாதிருக்க முடியுமா? "அரிச்சுவடிப் புத்தகத்திலே ஆரியனை அய்யர் என்றும், அல்லும்பகலும் உழைத்து வாழும் திராவிடனை, உழவன், தட்டான், தச்சன் என்றும் எழுதப்படுகிற துணிவைக் கண்டு துள்ளுகிறான் மானமுள்ளவன்! இதைத் தடுக்க முடியுமா? சமத்துவத்தைப் பரப்பும் நோக்குடன் எத்தனை நூல்கள் திராவிடருக்கு வேதமாக்கப்பட்டுள்ளன? பிராமணனோடு சூத்திரன் உட்கார்ந்தால் சூத்திரனது பின் பாகத்தை அறுத்தெறிய வேண்டுமென்ற அறிவுரைபுகலும் மனுநீதி! சம்பூகன் என்பவன் தவம் செய்ததற்காக "சூத்திரன் தவமியற்றுவதா?" எனச் சினந்து அவன் தலையைக்கொய்த இராமனது கருணைவரலாறான இராமாயணம்! அக்கினியில் மூழ்கி பிராமணவடிவம் பெற்றால்தான் பறையன் ஆலயத்தில் நுழையலாமென்பதை நிலைநாட்ட பெரிய புராண நந்தனார் கதை! ஆரியக்கொள்கைகளுக்கு அடிப்படை அமைக்க ரிக், யஜுர், சாம, அதர்வணம் போன்ற வேதங்கள்! இவைதான் திராவிடர் மறைநூலா? இவைதான் நெறியா? ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றே வாழ்ந்த திராவிடா! ஒழிந்துபட்டாயா என்று எண்ணும்போதுதான் இதயம் துடிக்கிறது. இந்துமதமென்ற சாக்கடை உனக்கு சட்டம் வகுப்பதா? எந்நாட்டிலாவது இம்மாதிரி ஒரு மதம் கண்டதுண்டா? கடவுள் என்றால் முப்பத்து முக்கோடி! முனிவர் என்றால் நாற்பத்தெண்ணாயிரம்! மாயா உலகமிதே என உபதேசித்து ஓயா இன்பத்தில் திளைக்கும் மகாத்மாக்கள்! இத்தனைபேர் இருந்தும் இந்நாட்டிலே உருப்படுவதற்கான துறை ஒன்றையுங்காணோமே! இந்துமதத்திலே இருபதினாயிரம் பிரிவுகள் ஏன்? விஷ்ணு லீலையை ஒருவன் எழுதினால் அதற்குப் போட்டியாக சிவன் திருவிளையாடலை ஒருவன் எழுதுகிறான். சைவ வைணவப் போட்டி எவ்வளவு? பாண்டியப் போரசிலே இடைக்காடன் என்ற புலவன் நாடு கடத்தப்பட்ட போது மதுரை சொக்கநாதரும் பின்தொடர்ந்தார் என்பது சைவக்கதை! படைத்த வைணவம் பார்த்துக்கொண்டிருக்குமா? பல்லவன் ஆட்சியிலே திருமழிசை ஆழ்வார் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட போது காஞ்சி வரதராஜப்பெருமாள் பின்சென்றார் என்று கட்டியது ஒரு புராணம்! காட்டுமிராண்டித்தனமான முறையிலே கருத்து செல்வதைக் காட்டினால் அது குற்றமா? அல்லது இளமையின் வரம்பை மீறியதாகுமா? பதினாயிரம் ரூபாயும், பத்துமாத காலமும் அளித்தால் ஒரு கழுதையைக் கடவுளாக்கிக் காட்ட முடியும். இது பெரியாரின் பேச்சிலே சிந்திய முத்து! கர்த்தபத்தைக் கடவுளாக்குவதா என்று காடுடைய சுடல் பூசிகள் உடனே எதிர்த்து வரலாம். கழுதை கடவுளாவதா என்று உமையுடைய வராகவதார மகிமர்கள் வாரி சுருட்டிக்கொண்டு ஓடிவரலாம். அவர்களுக்கொன்றுரைப்பேன். சாதாரண சபாபதி டாலர்களில் சதிராடும் காட்சி! உபயோகமில்லா உண்ணாவிரத மகாத்மாவான உலகாதிசயம்! பாறையில் தோண்டிய கலுங்கல் பரந்தாமனாகத் தோன்றிடும் விந்தை! ஆஞ்சநேயக் குரங்கு ஆழ்வாரான அற்புதம்! கேவலம் ஒரு பறவை கருடாழ்வாரான காட்டுமிராண்டித்தனம்! மலந் தின்னும் பன்றி கோவிஷ்ணுவாகச் சித்தரிக்கப்பட்ட புராணம்! இவையெல்லாம் கண்டும் கேட்டுமிருக்கிற பக்தகோடிகள் கழுதை கடவுளாவதில் ஆச்சரியப்பட வழியில்லை. எந்தக் கடவுளாவது பணமும், பிரச்சாரப் பலமும், இளித்த வாயரும், ஏமாற்றலுமில்லாமல் பரவியதுண்டா நாட்டிலே! கழுதை கடவுளாகும் இழி நிலையில் இந்நாடு இல்லையென்று யாராவது கூறட்டுமே பார்ப்போம். நாட்டிலே கல்வி உண்டா? அல்லது அறிவைப் பெருக்கும் சாதனம் உண்டா? ஆராய்ச்சிக்கு வழி உண்டா? மலங்கழிக்கும் கக்கூஸ்களிலே ஆண் பெண் படத்தைப்போட்டு அறிவுறுத்த வேண்டிய நிலையில் நாடு இருப்பதை எந்த தேச பக்தராவது எண்ணிப் பார்த்தார்களா? கல்வி என்ற பெயரால் மக்களுக்குக் கற்பிக்கப்படுவது கம்பராமாயணமும், கந்தப் புராணமுந்தானே? இதையெல்லாங்கண்டு இந்நாட்டு இளைஞன் துடிக்க மாட்டானா? "பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் தமிழ் பாஷையையே உப

யோசிக்க வேண்டு"மென்று டாக்டர் வெ. சாமிநாத அய்யர் எழுதியிருப்பதைக் கண்டால் உண்மையாகவே உள்ளம் நெருப்புக்குழம்பாகாதா? ஒரு ராகவ அய்யங்கார் பூதப்பாண்டியன் தேவியார், வீரத்தாய்மார் போன்ற புறநானூறுகளைத் திட்டவும், ஒரு தமிழர் சேதுப்பிள்ளை இலங்கையின் வீழ்ச்சியும், இலங்கை அணங்குமே எழுதிக்கொண்டிருக்கவுமான நிலைகண்டு எந்த மாணவன் மனந்தான் எரிமலையாகாது? கம்ப ராமாயணத்தைக் கசக்காதே! பெரிய புராணத்தைப் பொசுக்காதே! எனக் கதறிடும் புலவர் குழாம், தமிழுக்கும், தமிழர் கலைக்கும், தமிழர் நாட்டுக்கும் இதுவரை செய்ததென்ன? சேரன் செங்குட்டுவன் கனக விசயர் தலையிலே கல்லையேற்றினான் என்று கனல் கிளம்பப் பேசிவிட்டால் போதுமா? அவனது பரம்பரையில் வந்த தமிழன் பார்ப்பனர் தலையிலே தானத்தை ஏற்றுவதைப் புலவர்கள் காணவில்லையா? ஆரியரைப் போரிலே வென்ற அதே செங்குட்டுவன் மாடலமறையன் என்ற ஆரியன் மகாயாகம் செய்த போது மண்டியிட்ட வரலாற்றை எதிரிகள் நினைவூட்டினால் மானம் போகிறதே. அரசியலில் ஆரிய எதிரியாகவும், மதத்திலே அவர்களுக்கு மாமன் முறையாகவும், இருப்பதிலே பயன் என்ன என்பது தானே துடிக்கும் இளமை தொடுக்கும் கேள்வி! உண்டா பதில் உலகாண்ட திராவிடனே! இமயத்திலே இருகொடி செதுக்கி, பர்மாவிலே படைகையைப்பிதுக்கி வீரம் கொப்பளிக்க வெற்றி போரை வாழ்ந்த திராவிடா! நீ வீழ்ந்தது ஏன்? வாளேந்திய உனது கரம் வஞ்சகர் தாளேந்துவது ஏன்? வாழ்வை வளப்படுத்தி வாகை மாலை சூடிய நீ வாழ்வை நம்பாதே என்ற வார்த்தைக்கு வயப்பட்டதேன்? ஆரியரும் அவர்கள் தாசரும் செய்த சதி என்ற பதில் கிடைத்த மாத்திரத்தில் பச்சிளம் இதயங்கள் குமுறாதா? பொய், காற்றடைத்தபை, நீர்க்குமிழி யார்க்கும் உதவாது என்ற வார்த்தைகளின் தாயகம் நற்காப்பில் முளைத்திருப்பது கண்டு இளமை துடிக்கிறது. வடநாட்டு வாணிபம் தனியரசு செலுத்திய திராவிடத்திலே வலிமை பெற்றது கண்டு இளமை துடிக்கிறது. பசி பசி என மக்கள் அலறிட இதோ கொஞ்சம் புசியெனக் கூறிட வாயெழாத வள்ளல்கள் கோயில் தெரிசனத்துக்காகக் கும்பாபிஷேகஞ் செய்திடுவது கண்டு இளமை துடிக்கிறது. ஆரிய ஆட்சியிலே அணைப்பு, ஆதித் தமிழரை அரசியல் பிணைப்பினின்று விலக்கியது கண்டு இளமை துடிக்கிறது. இரண்டு இலக்ஷத்து—இருபத்தேழு அல்லவா—இந்தப் பரப்புகொண்ட இனிமைத் திராவிடம் தனித்து வாழ நடைக்கல் போடும் தருக்கர் உறுதி கண்டு இளமை துடிக்கிறது. இந்திய சரித்திரத்திலே, இணையின்றி வாழ்ந்த மூவேந்தர் வரலாறு தீட்டப்படாதது கண்டு இளமை துடிக்கிறது.

இந்து மத சீர்திருத்தத்தை எதிர்த்திடும் இழி செயலையும் இனப் பற்றையும் காண இளமை துடிக்கிறது. இந்தத் துடிப்பு இதுபோன்ற ஆண்டு விழாக்கள் கொண்டாடுவதோடு நின்றுவிடாது. இந்த ஆண்டு விழாக்களின் எதிரொலி திராவிடம் மீட்சிபெற்ற விழாவை—மடமை மடிந்தொழிந்த 'மே' தினத்தைக் கொண்டாடித்தான் தீரும். நடிக்கும் நச்சுக் கொள்கையினரே! துடிக்கும் இளமை வாளைப் பிடிக்கும் காலம் வந்து விட்டது. இடிக்கும் இதயம் வெடிக்கும் எரிமலை என்பதை நெஞ்சில் நிறுத்தும்! என்ற எச்சரிக்கையோடு இளமையின் துடிப்புக்கு மடை கோலுமாறு இந்நாட்டினரை அழைக்கிறேன்!

வருக திராவிடம்!
வணக்கம்!

குடந்தைத் திராவிட மாணவர் மலர்

(தோழர் கோ. சி. பெரியசாமிப் புலவர்)

சென்றயாண்டில் குடந்தையில் நிகழ்ந்த மாணவர் மாநாட்டின் சிறப்பு விழா ஆற்றும் பணியை எனக்களித்துச் சிறப்பித்த தோழர் எஸ். தவமணிராசன் அவர்களைத் தமிழ் நாடு அம்மாநாட்டின் மூலம் நன்குணர்ந்தது.

அம்மாநாட்டின் பயனாகக் கிடைத்த மணிகளாம் எம். இளந்தாடி நெடுஞ்செழியன், பி. ஜனார்த்தனன், அன்பழகன், எஸ். தவமணிராசன் முதலியோர். இடைவிடாது நாடெங்கும் சுற்றி, நாடு நமதே, செயலாற்றுமின்! எனப் போர்ப்பறை முழங்கினார்கள். இவர்கள் கல்லூரி மாணவர்களாகையாலும், இளைஞர்களாதலாலும், கல்லூரி உயர்நிலைப்பள்ளி, ஏன் நடுத்தரப்பள்ளி மாணவர்களிடையேயும் விழிப்புணர்ச்சி யுண்டாயிற்று. "தேசியம்" என்ற போர்வையில் அறிவு தரிக்கப்பெற்ற திராவிட மாணவர் பலரும் அப்போர்வையை அகற்றி, யாம் யார்? நம் நாடு எது? யாம் எப்படி வாழ்கின்றோம்? என்பனவற்றை நன்குணர்ந்து திராவிடநாட்டைப் பெறும் பணியில் ஈடுபட்டு மாநாடு கூட்டித் தங்கள் நிலையை விளக்கினர். பொதுஉடைமைக்காரரால் பேறுத்தப்பெற்ற மாணவரும் பொது உடைமையின் பெயரால் முதலாளிகளின் ஸ்தாபனமாகிய காங்கரஸ் நிறுவனத்திற்கு ஆதரவளித்தலைக் கண்டும், பொதுஉடைமைப் பூச்சாண்டியிலிருந்தும் விலகித் திராவிடர் இயக்கத்திற் சேர்ந்தனர்.

குடந்தைத் திராவிட மாணவர் மாநாட்டின் எதிரொலிதான் மதுரைத் திராவிட மாணவர் மாநாடும், தஞ்சைத் திராவிட மாணவர் மாநாடும், ஏனைய திராவிட மாணவர் மாநாடும் எனத் துணிந்து கூறலாம். திராவிட மாணவர்கள் இவ்வெழுச்சியூட்டிப் பெற்று பணியாற்றுதலைக் கண்ட பிறர் வயிற்றெரிச்சலால் பொய்யும், புனைந்துரையும் இட்டுக்கட்டி இவ்வியக்கத்தைக் கெடுக்கச் சூழ்ச்சி புரிந்தும், அச்சூழ்ச்சிகளைத் தகர்த்தெறிந்து மாணவர்கள் விழிப்புடன் செயலாற்றுகின்றனர். அண்மையில் திருச்சியில் திராவிட மண்டில மாணவர் மாநாடு நிகழவிருக்கின்றது. இங்ஙனம் குடந்தை மாணவரிடையே தோன்றிய விழிப்புணர்ச்சி திராவிடநாட்டைப் பெற்றே தீர்ப்போம் என மாணவர்களை மார்தட்டிக் கூறச்செய்து மாநாடு நடத்தவும் வழிகாட்டிற்றென்றால் இத்தகுசிறப்பிற்கெல்லாம் அடிப்படையாயமைந்த அம்மாநாட்டைச் சிறப்பாக நடத்திய குடந்தை மாணவர்கட்குப் பொதுவாகவும், எஸ். தவமணி இராசன் போன்றார்க்குச் சிறப்பாகவும், திராவிடநாட்டார் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்.

இம்மாணவ மணிகள் தொடங்கிய கழகம் ஓராட்டைக் குழவியே. ஆயினும் விளையும் பயிர் முளையிற்றெரியும் என்னும் முதுமொழிக்கேற்ப முளையிலேயே நன்கு செழித்துத் தோன்றிப் பெரும் பயனளித்தலால் மேலும் வளர்ந்து நற்பயன் தருமென எண்ணுகின்றேன். இம்மாணவர் கழகம் திராவிட நாட்டைத் தனியே பெற்றுத் திராவிடம் பெற்ற மகிழ்ச்சி விழாவினையும் கால்நூறு ஆண்டு கழித்து வெள்ளி விழாவையும், ஐம்பதாண்டு கடந்து பொன் விழாவையும், ஒரு நூறு ஆண்டு கழித்து வைர விழாவையும் கொண்டாடி வளர்ச்சியுறுக, வளர்ச்சியுறுக என வாழ்த்துகின்றேன்.

மாணவர் மலர்ச்சி

(கி. தியாகராசன்)

'திராவிடநாடு திராவிடருக்கே', 'அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை' என்பனபோன்ற பேரொலிகளைத் திக்கெட்டும் எழுப்புகின்றனர் உணர்ச்சியின் உருவங்களாகிய மாணவர்கள். எனவே நாட்டிலே கிளர்ச்சிதான் கிளர்ச்சி முதிர்ச்சியடைந்துவிட்டது; இனி, புரட்சிதான். புரட்சியின் இறுதியில் திராவிடநாடு திராவிடருக்கே ஆக்கப்பட்டு அமைதி நிறுவப்படும் என்பது திண்ணம்.

நாட்டிலே மக்கள் நாயினுங் கேடாய் நலிவுற்றிருக்கின்ற நிலையைக் கண்ட மாணவர்கள் நலிவிற்குக் காரணம் யாதென ஆராயத் தலைப்பட்டனர். சீருடன் வாழ்ந்த ஓரினம் சிக்கலுக்குட்பட்டுச் சிதைவுற்ற மர்மத்தை உணர்ந்தனர். வகையுடன் வாழ்ந்த இனம் வறுமைப் பிணிகளாய் வாடி வதங்கிடும் நிலையைக் கண்டனர். வரலாற்று ஏடுகளை நடுநிலைக் கண்கொண்டு ஆராய்ந்த ஞான்று அறிந்தனர் உண்மையை. பதறிற்றுள்ளம். கொதித்தது குருதி. துடித்தன தோள்கள். எழுந்தனர் வீறுடன். இனி, நாட்டிலே போர்தான். ஆம், போர்தான். உரிமைக்காகப் போர். மனமுடன் வாழ்வதற்காகப் போர். பகுத்தறிவே அவர் தம் ஒப்பற்றப் போர்க் கருவி. எனவே வெற்றி கிட்டுவது ஒருதலை.

தந்திக் கம்பியை அறுத்து அறுபட்ட முனையில் சுயராஜ்ய ஒலிக் கேட்கின்றதாவெனக் காதை வைத்துக் கேட்பதற்காகவும், தண்டவாளத்தைப் பெயர்த்தெறிந்து அதனடியில் சுயராஜ்ய ஒலி ஒலிக்கின்றதாவெனச் செவிசாய்த்துக் கேட்பதற்காகவும், அஞ்சற்பெட்டிகளையும், அஞ்சல் நிலையங்களையும், தொடக்கப் பள்ளிகளையும் தீக்கிரையாக்கி அத்தீயினின்றும் எழும் புகையில் சுயராஜ்ய மணம் வீசுகின்றதாவென மோப்பம் பிடிப்பதற்காகவும் அல்ல இன்றைய மாணவர்களின் போர். சிதைவுற்ற இனத்தைச் சீர்பெறச் செய்யவே[illegible] மாணவர்களின் போர் நேர்மையை யடிப்படையாகக் கொண்டது.

உண்மைப் பொதுவுடைமைக் கொள்கைகள் இன்னவை யென்பதை உணர்ந்திடாவிடினும் தங்களைப் பொதுவுடைமைக்காரர்கள் எனக் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றனர் சில மாணவர்கள். மதத்தினால்தான் மக்கள் முன்னேற வியலும் என்னும் டால்ஸ்டாயின் போலிக் கொள்கையை அடியோடு அகற்றி, மதம்தான் மக்களிடைய உயர்வுதாழ்வு கற்பித்து மக்களை அடிமையாக்கியது என்ற உண்மையைத் தக்க முறையான் மக்கட்கெடுத்தியம்பி, மதத்தின்பெயரால் எழுப்பப்பட்ட கோயில்களையும், அவைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு மக்களை ஏய்த்துவந்த மதாச்சாரிகளையும் அறவே களைந்ததினால்தான் இலெனின் இரஷியநாட்டிலே பொதுவுடைமையை நிலைநாட்ட முடிந்தது. இந்நாட்டிலோவெனின் வெறும் பூணூற் பொதுவுடைமைப் பேசுகின்றார்களேயொழிய, மதத்தால் மக்கள் மடையர்களானதைப் பற்றியோ, கோவில்களில் குருக்கள்மார்களின் பித்தலாட்டங்களைப் பற்றியோ, கோவில்களில் பொருள் வறிதே குவிந்து கிடப்பதைப் பற்றியோ, பார்ப்பனர்களின் சூழ்ச்சியைப் பற்றியோ எந்தப் பொதுவுடைமைக்காரனாவது இதுவரை யெடுத்தியம்பியதுண்டா? இல்லையெனின் ஏன்? இயம்பிடின் அவர்கள் அறிவார்கள் பாமர மக்களை ஏய்த்தல் இயலாதென்று. இதைப் பற்றித் தன்மானமுள்ளவன் எடுத்தியம்பினால் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள், "தில்லையில் தாண்டவமாடும் நடராசரின் சிலை பொதுவுடைமைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுதான் செய்யப்பட்டது; அவர் நடனம்புரியும் பொற்சபை உலகின்கண்ணுள்ள பொதுவுடைமைப் பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் தலைமைப் பொதுவுடைமைப் பல்கலைக் கழகம்" என்று கூறுகின்றனர். என்னே இவர் போன்றாரின் அறிவின் பெருக்கு! நடராசருக்குப் பொதுவுடைமையைக் கற்பிக்கும் இவ்வன்பர் அந்நடராசர் அண்மையிற் செல்ல உரிமையுண்டா என்று பகுத்தறிவாளன் கேட்கின்றான். இங்ஙனம் கூறியாவது பாமர மக்களை யேய்க்கலாமென்பது அன்னார் தம் குறிக்கோளாயிருப்பின் அவரைப் பற்றிய அக்கறை நமக்கில்லை. எனினும் அவர் தம் செய்கை எள்ளி நகையாடற் குரித்தே. எனவே மாணவர்கள் உணரவேண்டும்: லெனினின் பொதுவுடைமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் எங்கள் ஒப்பற்ற தலைவர் பெரியாரின் கொள்கையென்பதை.

காசுவையில் மிக்கிருப்பின் வேசியின்பால் ஆசைகொண்டு தங்கள் காசைக் கரியாக்கும் காமுகர் போல சில மாணவர்கள் தேசியமென்றால் ஆசைகொண்டு தங்கள் உழைப்பை வறிதே பாழ்படுத்துகின்றனர். வருணாச்சிரமம் வளர்க்கும் பார்ப்பனியம்தான் இந்நாட்டில் தேசியமாகக் காட்சியளிக்கிறதென்ற உண்மையை ஒவ்வொரு மாணவரும் உணர்தல்வேண்டும். தேசியவுணர்ச்சியை நாட்டின் நாலாப் பக்கங்களிலும் பரப்பிய தலைவர்களில் ஒருவரும், தேசியத்திற்காகத் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்தவரும், முதல் முதல் இந்நாட்டில் கப்பலோட்டி வாணிபம் நடாத்திய செல்வருமான தோழர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தம் இறுதிக்காலம் எங்ஙனம் முடிவுற்றது? கல்வி கற்றற்குக் கூட வழியிலாது அல்லற்படும் அவர் தம் பிள்ளைகளைப் பற்றி யாராவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? அண்மையில் இயற்கையெய்திய தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களின் திருமகளாருக்கு நாள்தோறும் எத்தனைப் பேட்டிகள்! ஏன் இவ்விரு வேறுபட்ட நிலை இந்நாட்டில்? இந்நிலையை மாற்றத்தான் தன்மானமுள்ளவன் துணிந்துவிட்டான்.

ஆங்கிலேயர் ஆட்சியை அறவே அகற்றுவோம் எனப் பறையறைந்த ஆச்சாரியார், அரசாட்சியில் [illegible] பெற்றதும் [illegible]

லேயருடன் ஆலிங்கினஞ் செய்து கொண்டு அளவற்ற அல்லல்களை நம்மவர்க்களித்ததை மறந்துவிட்டீர்கள்? நீதி கட்சி தோற்றது நல்லதெனக் கூறிய எங்கள் பெரியாரையும் அவரின் உண்மைத் தொண்டர்களையும் சிறைக்கனுப்பிக் கொடுமைக்குட்படுத்திய ஆச்சாரியார், 'கோயில்களுக்குள் செல்லும் ஆதிதிராவிடர்களைத் தடுப்பவர்களையும் சிறைக்கனுப்பப்படும் என்று ஏன் ஓர் சட்டம் இயற்றக்கூடாது? இதிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உங்கள் உள்ளத்தில் விளங்கவில்லையா சாணக்கியரின் பரம்பரையிற்றோன்றிய ஆச்சாரியாரின் சூழ்ச்சி? சூரத் மாநாட்டிலே நடந்த நிகழ்ச்சியை ஓர் மணித்துளி பொழுதேனும் உங்கள் மனக்கண் முன்னர் கொணர்ந்து பாருங்கள். விளங்கும் உண்மை வெள்ளிடைமலைபோல். எனவே மாணவர்களே! விழித்தெழுங்கள். உங்கள் உழைப்பு உங்கள் இனத்திற்கே பயனளிக்கட்டும்.

ஒன்றே குலமெனும் உயர்தனிக் கொள்கையுடைத் தமிழகத்தே அண்டிப் பிழைக்கவந்த ஆரியக் கூட்டம் சாத்திரங்களைக்கொண்டு பலக் கோத்திரங்கள் வகுத்து பாட்டாளி மகனைச் சூத்திரனாக்கிய வரலாறு உங்கட்கு ஆத்திரமூட்டுகின்றது. ஆதலின் ஆரியமே! நின் ஐந்தாம்படை வேலைக்கினி அழிவுதான். மதம் பிடியா மக்களிடையே மதத்தைப் புகுத்தி, கணக்கிலடங்காக் கடவுளர்க் காட்டி அவர்களிடைப் பிணக்குகளிழைத்தப் பார்ப்பனீயமே! இனி உன் சூழ்ச்சிவலை அறுக்கப்படும். 'கலையான் புற்றெடுக்க கருநாகம் குடி போனது' போல் பாட்டாளி மகன் குருதியை வியர்வையாகச் சிந்தி அவியாவுழைப்பினால் கட்டிய கோவில்களில் பார்ப்பனர்களே உங்கட்கென்ன வேலை? எங்கள் கோவில்களிற் குவிந்து கிடக்கும் பொருள்கள் இனியும் உங்கள் தொந்தியைப் பெருக்கப் பயன்படுமென மனப்பால் குடிக்கவேண்டாம். மக்களின் பண்புகளையே கலையாகக் கொண்டத் தமிழரிடை இனத்தைக் கொல்ல செய்யும் புதிய கலைகளைப் புகுத்திய ஆரியமே! இனி, [illegible] வஞ்சப்பட்ட கலை

கள் கொலை செய்யப்படுமென்பதை நீயுணர். வடநாட்டு முதலாளிகளே! உங்கள் நாட்டிலே மக்கள் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலும் இன்பமுடன் வாழ்வதற்கும் எங்கள் நாட்டில் மக்கள் இருக்கவும் இடமின்றி வறுமையால் வாடுவதற்கும் காரணம் இன்னதென்பதை உணர்ந்துவிட்டோம். ஆகலின் இனியும் நீங்கள் எங்கள் செல்வத்தைக் கொள்ளையடிக்க முடியாது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

எனவே, மாணவர்கள் உள்ளம் மலர்ச்சியடைந்து விட்டது. போர் தொடங்கும் நாள் எந்நாள் எந்நாளென அவர்கள் தோள்கள் துடிக்கின்றன. உண்மைக்காகப் பாடுபட்ட வீரர் பலரின் வரலாறுகளையும் அவர்களின் அஞ்சா நெஞ்சத்தின் திண்மையையும் நன்குணர்ந்த மாணவர்கள் எதற்கும் அஞ்சார்கள். ஆகவே, திராவிட நாடு திராவிடருக்காவது திண்ணம். வாழ்க திராவிடம்! வாழ்க பெரியார்!

கோவை திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

நாளது 19-2-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கோவை திராவிடர் கழகக் கட்டிடத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிர்வாகக் கமிட்டியில் வரும்:

1. முதலாவது திராவிடர் மாநாடு நடத்தும் தேதி இடம்,
2. தலைவர், திறப்பாளர்,
3. இதுவரை வசூலான கணக்குகளை செயலாளர் ஒப்புவித்தல்,
4. மாநாட்டை சிறப்பாக நடத்த வரவேற்புக் கமிட்டி அமைத்தல் முதலியன.

கோவை திராவிடர் கழக உறுப்பினர்கள், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் யாவரும் தவறாமல், இதுவே அழைப்பாகக் கொண்டு வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயலாளர்,
கோவை திராவிடர் கழகம்.

சமாதானத்திற்கு 'மஹா யாகம்'?

[illegible] லட்சம் ரூபாய் செலவா?

பார்ப்பனர்களின் வேட்டை?

ஹைதராபாத் (தக்காணம்) பிப். 3- உலக சமாதானத்திற்காக நேற்று மாலை முதல் இங்கு ஆரம்பித்திருக்கும் "மஹா யாகத்"தில் இந்தியா பூராவிலிருந்து ஆயிரத்துக்கு மேலான பிராமணர்களும், நிஜாம் சமஸ்தானத்திலிருந்து 2000 பிராமணர்களும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த யாகம் 11-நாள் நடக்கும். இதற்கு 10-லட்சம் ரூபாய் செலவாகும்.

மொத்தம் 104 குண்டலிகள் (குழிகள்) வெட்டப்பட்டிருக்கின்றன. யாக களம் பூராவும் இதில் அக்னி வளர்க்கப்பட்டு வரும். ஒவ்வொரு குண்டலியைச் சுற்றிலும் 8-பண்டிதர்கள் அமர்ந்து, சாஸ்திரங்களும் புராணங்களும் ஓதுவர்; நெய்யும், தானியங்களும் அக்னியில் சேர்க்கப்படும்.

தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு சாப்பாடு வழங்கப்படும்; இதற்காக என்று தனி ரேஷனிங் ஆபீஸ் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

யாகத்தைப் பார்ப்பதற்காக ஸ்திரீகளுக்கென பிரத்யேக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரந்தையில் கூட்டம்

தஞ்சாவூரில் கரந்தைத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் 11-2-45-ந் தேதி தஞ்சை ஜில்லா செஷன் ஜட்ஜு தோழர் அ. அனந்தநாராயண அய்யர் தலைமையில் டாக்டர் சர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் 'யுத்தத்திற்குப் பின் திருத்தியமைத்தல்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

19-12-44ந் தேதி தோழர் எ. இரத்தினம் தலைமையில், சென்னை, ராயபுரம், லிங்கம் நகரில் நடைபெற்றக் கூட்டத்தில், தாழ்த்தப்பட்டோரின் நிலைமை பற்றி தோழர்கள் கே. சாந்தலிங்கம், ஜி. கோபால் முதலியவர்கள் பேசினார்கள். அவர்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து அப்புறப்படுத்த லஸ்லுமியான் கோர்ட்டில் பிராது தாக்கல் செய்திருப்பது பற்றியும் பேசினார்கள்.

1945-ஆம் ஆண்டு

யுத்தத்தின் தோற்றம்

★

பெரும்போர்கள்
மகத்தான இரத்தவெள்ளம்
எண்ணற்ற போர்க்கைதிகள்

★

எனவே,
செஞ்சிலுவை சங்கம், எப்பொழுதையும்விட
உங்கள் உதவியை நாடுகிறது.

"செஞ்சிலுவை"
என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு

உடனே பணம்கொடுத்துதவுங்கள்

சென்னை பொதுமக்களின் மாபெருங் கூட்டம்

இந்து சட்ட திருத்தத்திற்கு ஆதரவு

சென்னைப் பொதுமக்களின் சார்பில், கூட்டப்பட்ட மேற்படி இந்துசட்ட திருத்த ஆதரவின் மாபெருங்கூட்டம் ஒன்று 5-2-45 திங்கள் மாலை 6-15 மணிக்கு கோகலே மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான ஜனத்திரள் மண்டபத்திற்கு உள்ளும் வெளியேயும் நிரம்பியிருந்தனர். ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் அண்டு செஷன்ஸ் ஜட்ஜ் தோழர் டபுள்யு. சக்ரபாணி நாயுடு அவர்கள் பலத்த கைதட்டுதலுக்கிடையே தலைமை வகித்து இந்து சட்ட திருத்தத்தின் அவசியத்தை சட்ட ரீதியாக வாதித்து ஆணித்தரமாகப் பேசினார்.

பின்னர் தோழர்கள் எஸ். முத்தையா முதலியார், இந்திராணி பாலசுப்பிரமண்யம், எஸ். லட்சுமிரதன் பாரதி, சத்தியவாணிமுத்து, பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் ஆகியவர்கள் மிக விளக்கமாக, சட்ட திருத்தத்திலுள்ள ஒவ்வொரு விடயங்களையும் எடுத்துக்காட்டி விரிவுரை ஆற்றினார்கள்.

அடுத்தபடியாக தோழர் சி. என். அண்ணாதுரை பேசுகையில் சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் இந்து சட்டத்தை ஆதரிப்பதானது மிக சாதாரண காரியமென்றும், இந்து மதமே அழியப் பட்டாலன்றி திராவிடர்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படாதென்றும், எனினும் அந்நிலை ஏற்படும் வரையில், ஓரளவாவது சீர்திருத்த இந்து சட்ட திருத்தத்தில் இடமிருக்கிறதா என்று தீர யோசித்த பிறகே பெரியாரும், நாங்களும் இச்சட்டத்தை ஆதரிக்க முன்வந்தோமே தவிர, இச்சட்டத்திருத்தந்தான், முடிவானது என்று நாங்கள் நம்பியிருக்கவில்லையென்றும், இந்நாட்டில் சமூக சீர்திருத்தச் சட்டங்கள் வரும்போதெல்லாம், வைதீகர்களின் ஈனக்குரல்கள் கிளம்பி அடங்குவது இயற்கையாதலால், எதிர்ப்பைப் பற்றி லட்சியம் செய்யவேண்டிய அவசியம் சர்க்காருக்கோ, அல்லது பொது மக்களுக்கோ இல்லையென்பதை எடுத்துக்காட்டி விரிவுரையாற்றினார்.

பின்னர் தோழர் குஞ்சிதம்-குருசாமி, இந்து சட்ட திருத்தக் கமிட்டியில் பார்ப்பனரல்லாதாரை (திராவிடர்களை) மூன்று பேர் நியமிக்கவேண்டுமென்றும், மேலும் பல திருத்தங்கள் சட்டத்தில் செய்யவேண்டுமென்றும் 2 தீர்மானங்களைக் கொண்டுவந்தார். பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் ஆதரிக்க ஏகமனதாக நிறைவேறியது.

கடைசியாக ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி பேசுகையில் இக்கூட்டத்தின் வாயிலாக நாம் தீர்மானிக்கும் முடிவுகளை சர்க்கார் செவியேற்று அதன்படி நடப்பார்களென்று நான் நம்பவில்லை, ஏனெனில் வைதீகர்களின் எதிர்ப்பை இதற்கு ஆதாரங்காட்டி அவர்களை நாம் கண்டிப்பதைவிட சர்க்கார்தான் இதை இவ்வாறு பல சிக்கல்களுக்கு இடம் ஏற்படுத்திவிட்டதாகச் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் மனது வைத்தால் ஒரு நொடியில் இதைவிட இன்னும் தீவிரமான திருத்தங்களோடு சட்டத்தை நிறைவேற்றிவிடலாம். இதற்காக ஏன் இவ்வாறு சாட்சியங்களும், மற்றவைகளும். வைதீகர்களைக் கேட்டால் சீர்திருத்தம் வேண்டாம் என்றுதான் சொல்லுவார்கள். அதேபோன்று அக்கமிட்டியிலும் பார்ப்பனர்களையே வைத்துக்கொண்டு காரியத்தை நடத்தினால் எவ்வாறு மற்ற சமூக மக்களின் நலன்கள் கவனிக்கப்படும்? ஆதிதிராவிட மக்களைக் கலந்தார்களா? மற்ற சமூகங்களைத்தான் கலந்தார்களா பொதுவாக திராவிடர்களாகிய நமது பெரும் சமூகப்பிரமுகர்களையாவது கமிட்டியில் போட்டிருக்கிறார்களா என்றால் அதுதான் இல்லை. ஆனவே சர்க்கார் இதுவிடயத்தைச் சாதாரணமாகக் கருதாமல் உடனே வேண்டியதைச் செய்யுமாறு எச்சரிக்கிறேன். இந்த சட்ட திருத்தம் எங்கள் கொள்கைக்கு மிக மிகச் சாதாரணமானதுதான் தோழர் அண்ணாதுரை கூறியதைப்போன்று. அதற்குக் கூட பசப்பு வார்த்தைகள் கூறி ஏமாற்றுவதென்றால் அது இனி முடியாது. பொதுவாக திராவிட நாடு பிரிக்கப்பட்டால்தான் திராவிட சமூகம் எல்லாவற்றிலும் மானமாக வாழ முடியும். எனவே இன்னும் பல இடங்களில் இது பற்றி கூட்டங்கள் கூட்டி ஆதரிக்கவேண்டும் என்று குறிப்பிட்டு சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின், தோழர் என். வி. நடராசன் வணக்கங்கூற கூட்டம் இரவு 9-30மணிக்கு முடிவுற்றது.

குடி அரசு

1945-ஆம் பிப்ரவரி-மீ 10உ

திராவிட மாணவர் எழுச்சி

திராவிட மாணவர் கிளர்ச்சி நாடெங்கும் இன்று தோன்றி வருகிறது. எங்கு நோக்கினும் திராவிட மாணவர்கள் எழுச்சியுற்று வீறுகொண்டு வீர முழக்கம் செய்து வருகின்றனர். அவர்களது மன எழுச்சியை, ஆர்வத்தை, ஊக்கத்தை இம்மலரின் கண்வந்துள்ள கட்டுரைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இன்று உலகம் போகும் போக்கில்- வேகத்தில் மாணவர்கள் மட்டும் தூங்கிக்கொண்டிருக்க வேண்டும், அதிலும், பார்ப்பன மாணவர்கள் தங்கள் இன நலத்துக்காக, தங்கள் இன உயர்வுக்காக பாடுபடும்போது, திராவிட மாணவர்கள் மட்டும் கும்பகர்ண நித்திரையிலிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா?

மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது, கல்வியிலே கவனம் செலுத்தவேண்டும் என்று சொல்லுவார்கள் சிலர். இது மேல்நாடுகளுக்குத்தான் பொருந்துமேயல்லாது நம நாட்டைப் பொருத்தமட்டில் பொருந்தாது.

ஏனெனில், அந்நாடுகளில் படித்தவர்கள் தொகை அதிகம். படித்தவர்கள் எல்லாம் உத்தியோக வேட்டையாடுவதில்லை; படிப்பு உத்தியோகத்திற்காகத்தான் என்று கருதுவதுமில்லை; படித்த மக்கள், மாணவப்பருவம் நீங்கிய பிறகு நாட்டின் நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறார்கள். ஆதலால் மாணவர்கள், அறிவை வளர்க்கும் காலையில்—பருவத்தில் வேறுதுறைகளில் கவனத்தைச் செலுத்தாமல், அறிவையே வளர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இது நியாயம். ஏனெனில், படித்த மக்கள், தங்களுடைய அறிவுக்குப் பொருத்தமானதை நியாயமானதை பகுத்தறிவுப்படிச் சிந்தித்து நடந்துகொள்ளமுடிகிறது; அவர்களை வஞ்சகர்களால், சூழ்ச்சிக்காரர்களால் எளிதில் தங்கள் வலைகளில் விழும்படிச் செய்ய முடிவதில்லை.

இந்நாட்டின் நிலைமையோ எனில் அவ்வாறு இல்லை. இந்நாட்டில் படித்தவர்களின் தொகை மிகக் குறைவு. அதிலும் பார்ப்பனர்களில் 100க்கு 100 பேர் படித்திருக்கிறார்கள்; பார்ப்பனரல்லாத மக்களில் 100க்கு 8 பேர்களுக்கு மேல் இல்லை. பார்ப்பனர்களில் யாவரும் படித்திருப்பதினால், மந்திரி வேலை பார்க்கும் அய்யர் முதல் காப்பி ஹோட்டல்களில் 'டவரா' எடுக்கும் பார்ப்பனன் ஈறாக எல்லாப் பார்ப்பனரும் தங்கள் இனநலத்துக்காகப் பாடுபட முடிகிறது, பாடுபட்டும் வருகிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதார் மக்களில் படித்தவர்கள் தொகை குறைந்திருப்பதினாலும், படித்தவர்கள் யாவரும் உத்தியோகம் தேடுவதும் அதைக் காப்பாற்றவேண்டியபொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டுவிடுவதும், ஏற்பட்டுக்கொண்டு இருப்பதும் ஆன நிலைமை இருந்துவருகிறது. இந்த நிலையில், பார்ப்பனரல்லாதாரில், பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக அவர்களது விடுதலைக்காகப் பாடுபட முன்வரக்கூடியவர்கள் யாராக இருக்க முடியும்? படித்தவர்களின் நிலை இவ்வாறு இருக்கிறது. படிக்காதவர்கள் நிலையோ எனில், செம்மறியாடு போல் கண்மூடித்தனமாக பின் பற்றும் நிலையிலிருக்கிறது.

ஆரிய விஷம் உடலில் ஊறிப்போயிருக்கிறது. அம்மயக்கத்திலிருந்து தெளிய பகுத்தறிவு என்னும் 'இஞ்சக்ஷன்' கொடுக்கவேண்டும். 'பகுத்தறிவு' இஞ்சக்ஷன் கொடுக்கக்கூடியவர்கள் படித்த மக்கள்தான். 'பகுத்தறிவு இஞ்சக்ஷன்' கொடுக்கக்கூடிய படித்தவர்கள் எல்லாம் தன்னலக்காரர்களாய், தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதிலே கருத்தைச் செலுத்திவிடுவதினால், படித்துவிட்டு வாழ்க்கையிலே ஈடுபடுவதற்கு முன்னாவது, இன உணர்ச்சியற்று, தன்மான மற்று, மாக்களைப் போல் வாழும் தன் இன மக்களுக்குப் "பகுத்தறிவு இஞ்சக்ஷன்" கொடுக்க மாணவர்களைத் தவிர வேறு யார்தான் தகுதியானவர்கள் என்று கேட்கின்றோம். இன்று திராவிட மாணவர்களாவது, இதற்கு முன்வராவிட்டால், எப்பொழுது திராவிட சமுதாயம் இன உணர்ச்சி பெற்று, தன்மானம் பெற்று வாழ முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள். திராவிட சமுதாயத்தை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சமூகத்தில் 100க்கு 100 பேர் படித்தவர்களாகயிருப்பதால், அவர்கள் கட்டுப்பாடாகப் பார்ப்பனரல்லாதார்களைத் தலையெடுக்கவிடாதபடி, எல்லாத் துறைகளிலும் புகுந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வருவதால், பார்ப்பனரல்லாத மக்களும் 100க்கு 100பேர் படித்தவர்களாகட்டும், எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தட்டும் அதன் பின்னர் பார்ப்பனரல்லாதார்—பார்ப்பனரல்லாத மாணவர்கள் கிளர்ச்சியில் இறங்கட்டும் என்று சொன்னால், பார்ப்பனரல்லாதார் என்று 100க்கு 100பேர்கள் படித்தவர்களாவது? எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவது? 100க்கு 100பேராக படித்த சமூகம் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவருகையில், மற்றவர்களுக்கு அவ்வளவு எளிதில் இடம் கொடுத்துவிடுவார்களா? ஆகவே, பார்ப்பனரல்லாத மாணவர்களில் சிலராவது, இவ்வாறு, "பகுத்தறிவு இஞ்சக்ஷன்" செய்ய முன் வந்தது நியாயமானதும் பாராட்டத்தகுந்ததுமாகும். இதில் ஆச்சரியப்படவேண்டியது—வருந்தப்படவேண்டியது, இவ்வளவு நாட்களாக, பார்ப்பனரல்லாத மாணவர்கள் விழிப்படையாதிருந்ததேயாகும்.

திராவிட மாணவர் இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு பிரமைகொண்டு, பார்ப்பனர்களும், பார்ப்பன மாணவர் இயக்கங்களும், திராவிட மாணவர் இயக்கத்தை வகுப்புவாத இயக்கம் என்று கூறலாம். இதைக் குறித்து யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. தனித்தனிவகுப்புகளாக பார்ப்பனர்களுக்கு ஒரு இடம்,

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு இடம், பார்ப்பனர் குடிக்கும் தண்ணீர் வேறு, பார்ப்பனரல்லாதார் குடிக்கும் தண்ணீர் வேறு, பார்ப்பனர் சாப்பிடும் இடம் வேறு, பார்ப்பனரல்லாதார் சாப்பிடும் இடம் வேறு என்று தனித்தனிப் பிரிவினைகள் இருந்து வருவதும், அதைக் குறித்து ஒரு வார்த்தையும் பேசாமல் இருந்து வருவதும், அதை எதிர்க்கிறவர்களைத் கண்டித்துக் கிளர்ச்சி செய்துவருவதும் நியாயம்; இவை வகுப்பு வாதம் அல்ல. இவ்வாறு வேற்றுமைகள் ஒழிக்கப்படவேண்டும், பேதங்கள் கூடாது சமத்துவம் வழங்க வேண்டும்; அடிமைத் தனமை ஒழியவேண்டும்; தன்மானம் பெறவேண்டும் என்று கூறுவது, இதற்காகப் போராடுவது வகுப்பு வாதம். உண்மையிலே இதை வகுப்புவாதம் என்று சொல்லுவார்களேயானால், திராவிட மாணவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான்.

"மாணவர்கள் தேசிய இயக்கத்தில் பாடுபட்டுவந்துள்ளனரென்றும், இதைப் பற்றித் தோழர் சரோஜினிநாயுடு பாராட்டிப் பேசியுள்ளார் என்றும்" திருச்சியில் சென்ற வாரத்தில் நடைபெற்ற தமிழ் நாடு மாணவர் மாநாட்டுத் தலைவர் தோழர் பிரசந்த சஙயால் குறிப்பிட்டிருக்கிறார். மாணவர்கள் ஒரு இயக்கத்தில் சேர்ந்து ஒத்துழைப்பதைப் பாராட்டும்போது, வேறொன்றில் அவர்களுக்குப் பிடித்த இயக்கத்தில் தங்கள் மக்களின் இன நலத்திற்குப் பாடுபடும் இயக்கத்தில் சேர்ந்து உழைப்பது எவ்வாறு கண்டிக்கக் கூடிய காரியமாகும்? ஆகவே, திராவிட மாணவர்கள், எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கும், நயவஞ்சகப் பேச்சுக்களுக்கும் உள்ளாகாமல் திராவிட இன முன்னேற்றத்திற்காக நடந்த ஓராண்டு செய்துவந்ததுபோலவே இனியும் பெரியார் வழிநின்று தளபதி அண்ணாவின் ஆணை கொண்டு போராடுவார்கள் என்றும், இவ்வாண்டில் மண்டல திராவிட மாணவ மாநாடுகளையும், மாகாண திராவிட மாணவர் மாநாடுகளையும் கூட்டி கிளர்ச்சியை வலுப்படுத்துவார்கள் என்றும் நம்புகிறோம்.

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

10-2-45ந் தேதி வரை 26959-அங்கத்தினர்கள் ரூ. 2769—1—0 சந்தா

பிப்ரவரி மாதம் 10ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. தஞ்சை	4707	9. வட ஆற்காடு	1402
2. சேலம்	4309	10. மதுரை	1170
3. திருச்சி	3751	11. செங்கல்பட்டு	538
4. கோவை, உதகை.	3518	12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு)	168
5. திருநெல்வேலி	1884	13. இலங்கை	165
6. இராமநாதபுரம்	1846	14 பெங்களூர்	125
7. சென்னை	1700	15. புதுக்கோட்டை	59
8. தென் ஆற்காடு	1617		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 26959. சந்தா ரூ. 2769-1-0.

உலக சமாதானத்திற்கு வேள்வியா?

பார்ப்பனர்கள்—ஆரியர்கள் ஆடு மாடுகளைக் கொன்று வாழ்ந்து வந்தவர்கள் என்பதற்கு இன்றும் அவர்கள் செய்கைகள் எடுத்துக் காட்டாக இருந்து வருகின்றன. முன்காலத்தில் ஆடுமாடுகளைக்கொன்று தின்றார்கள் என்பதற்கு வேதங்களே சாட்சியம் பகரும்; இதிகாசங்களில் பல காட்சிகளைக் காணலாம்; புராணங்களில் பல கதைகளைக் காணலாம்.

அதுமட்டுமல்ல, இந்நாட்டில் புத்தமதம் தோன்றியதற்கே காரணம், ஆரியர்களுடைய யாகமும் வேள்வியுமேயாகும். யாகத்திற்காக ஓட்டிச் சென்ற ஆடுகளைக் கண்டு இரங்கி யாகச் சாலைக்குச் சென்று புத்தர் ஆடுகளைக் கொலைபுரிவதைத் தடுத்ததே விளக்கும் ஆரியர்கள்—பார்ப்பனர்கள் ஆடுகளின் மாமிசத்தைத் தின்பதில் எவ்வளவு வேட்கையுடையவர்கள் என்பதை. இதற்குக்காரணம் இல்லாமல் இல்லை. இவர்கள் பண்டைக் காலத்தில் ஆடுமாடுகள் மேய்த்துத் திரிந்துகொண்டிருந்தவர்கள் என்பதை வரலாற்றுச் சுவடி விளக்கும். ஆடுமாடுகளை மேய்த்து வாழ்ந்துவந்தவர்கள் எதையுண்டு வாழ்ந்திருக்க முடியும்? எங்கு அவர்கள் நிலையாகயிருந்து பயிர்செய்து வாழ்க்கை நடத்தியிருக்கமுடியும்? புல் உள்ள பகுதிகளைப் பார்த்து ஆடு மாடுகளை மேய்த்து திரிவது தானே அவர்களது தொழில். அவ்வாறு திரிந்தவர்கள் எதை உணவாக உட்கொண்டிருக்க முடியும்? புல்வெளிகளில் இவர்களுக்கு எது உணவாகக் கிடைத்திருக்கும்? ஆகவே, இவர்கள் ஆடுமாடுகளைத்தான் கொன்று அவைகளின் இறைச்சியை உணவாக உண்டுவந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.

உதாரணமாக துந்த்ரா பிரதேசத்திலுள்ள மக்கள் எதனை உணவாக உட்கொள்ள முடியும்? அங்கு தானியங்களோ காய் கனிகளோ கிடைப்பதில்லை! அந்நிலையில் அவர்கள் எதை உண்டு வாழ முடியும்? அங்குள்ள மிருகங்களைத்தான் உண்டு வாழ முடியும். ஏனெனில், அங்கு நீரில் உண்டாகும் ஒருவித பாசியைத் தவிர வேறு எதுவும் வளருவதில்லை. அவர்கள் மான்களை வளர்த்துவருகிறார்கள்; அது மான்களின் மீதுள்ள கருணையால் அல்ல. தங்களுடைய உணவுக்கு வேண்டுமென்பதற்குகாகத்தான். அவர்கள் மீது அன்பாக

ரோஜா முத்தையா

யிருக்கிறார்கள், பொன்போல் போற்றிவருகிறார்கள் என்றால், அவைகள்மீது அவர்களுக்கு இருக்கும் நேசத்தினாலல்ல, தங்களுக்கு அவை அவசியம் என்பதினால். இதுபோலவே, அந்நாளில் ஆரியர்கள் ஆடுமாடுகளை வளர்த்து வந்தார்கள் என்றால், தங்களுடைய உணவுக்காக என்பதை யுணர வேண்டும். பின்னர் அவர்கள் இந்தியா என்று சொல்லப்படுகிற இந்நிலப்பரப்பினுள் நுழைந்ததும், இங்கே நிலைக்க எண்ணினதும், இங்குள்ள திராவிட மக்கள் உணவுக்கு தானியம் முதலியவைகளை உட்கொண்டு வந்ததினாலும், ஆடுமாடுகளைக் கொன்று தின்பதைச் சிறிது சிறிதாகக் கைவிடவேண்டியதாயிற்று.

ஆனாலும், இவர்களால்—ஆரியர்களால், மாமிசம் தின்பதை அடியுடன் மறக்கமுடியவில்லை. யாகத்தின் பெயரால், வேள்வியின் பெயரால் நகரங்களில் கொன்று தின்னப் பயந்து காடுகளில் கொன்று தின்று வந்தார்கள். இதை எதிர்த்த திராவிடர்கள் அசுரர்கள்—அரக்கர்கள் என்று இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். வேதங்களும், இதிகாசங்களும், புராணங்களும் இதைத்தான் விளக்குகின்றன. யாகம் செய்யும்—வேள்வி செய்யும் பார்ப்பனர்களை எதிர்த்தவர்களுக்கும், (இவர்களை) காத்து வந்த கூட்டத்தாருக்கும் நடந்த போர்களை விளக்குவதுதான் இவைகள். திராவிடர்களுக்கு தன்மான உணர்ச்சியிருந்து வந்தவரை எதிர்த்துப் போராடி வந்தார்கள். ஆரிய விஷம் திராவிட மக்களின் இரத்தத்தில் பாய்ச்சப்பட்டு, திராவிடன் இரத்தம் ஆரிய நஞ்சால் விஷமாக ஆக்கிவிட்ட பின்தான் அவர்களால் வேள்விகளும் யாகங்களும் பயமில்லாமல் செய்ய முடிந்தது. அதுவும் பிரிட்டிஷ் ஆட்சியில் துப்பாக்கி முனையின் உதவிகொண்டு தான் சிறிதும் பயமில்லாமல் செய்ய முடிகிறது என்றால் மிகையாகாது.

பார்ப்பனருக்கு இறைச்சி வேட்கை உதித்தபோதெல்லாம் வேள்வி ஒன்றைக் கூட்டிவிடுவார்கள். பின்னர் உச்சிக்குடுமியும், புண்ட[illegible]ணமாகிய பல பார்ப்பன சாத்திரிகள் யாகத்திற்காக ப்பார்ப்பனரல்லாதார் அரசர்கள் முதலியவர்களிடமிருந்து பொருள் பறித்து வேள்வியை நடத்துவார்கள். ஆட்டிறைச்சியில் பிரியமுள்ளவர்கள் கசாப்புக் கடைகளில் சென்று வாங்கி புசிக்கட்டும் அல்லது ஆட்டை வாங்கி அறுத்து இறைச்சியை உப்பிட்டு வைத்துக்கொண்டு வேளாவேளை பக்குவம்பண்ணிபுசிக்கட்டும். மாமிசம் புசிப்பதை நாம் குறைகூற வரவில்லை; ஆடுமாடுகளைக் கொன்று தின்னுவது பாவம் என்றோ, அது இயற்கைக்கு விரோதமானதென்றோ கூறவில்லை. ஆனால் கடவுள் பேரைச் சொல்லி, வேள்விகாலத்தில் அரி அயனாதியர் முதற்கொண்டு 33 கோடி தேவதைகள் இறுதியாக எல்லாச் சாமிகளும் அவர்ப்பாகம் புசிக்க வருவார்கள் என்றும் அதன் மீதத்தை உண்ணுவதால், மோக்ஷமின்றிய இந்திராதி போகங்கள் சித்தியாகும் என்றும் பொது மக்களை ஏமாற்றி அரசாங்கத்தை ஏய்த்து அவர்கள் பொருளைக் கவர்ந்து இறைச்சி புசிப்பது யோக்கியமா? இது பெரும் புரட்டல்லவா, பித்தலாட்டமல்லவா? என்றுதான் கேட்கிறோம்.

ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால், நாம் இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த வேளையில். தக்காணத்தைச் சேர்ந்த ஹைதராபாத்தில் "ஹோம யாகம்" என்ற பெயரால் வேள்விசெய்து வருகின்றனர் ஆரியர்கள்-பார்ப்பனர்கள். இந்த யாகத்தில், இந்தியா முழுவதிலிருந்து ஆயிரத்துக்கு மேலான பார்ப்பனர்களும், நிஜாம் சமஸ்தானத்திலிருந்து 2000 பார்ப்பனர்களும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த யாகம் 11-நாள் நடக்குமாம். பிப்ரவரி 2-ஆம் தேதி மாலையிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது. இதற்கு 10-லட்சம் ரூபாய் செலவாகுமாம்.

இந்த யாகத்தில், மேலே காணப்படும் செய்தியிலிருந்து 3000-பார்ப்பனர்களுக்கு 11நாள் வரை நல்ல வேட்டை என்பது தெளிவாகும். 3000 பார்ப்பனரல்ல 50,000 பார்ப்பனர் வேண்டுமானாலும் 11 நாள் அல்ல 101 நாள் வேண்டுமானாலும் வேட்டையாடட்டும், எவ்வளவு ஆடுகளை வேண்டுமானாலும் கொன்று தின்னட்டும், அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. இவர்கள் வேண்டுமானால், தனித்தனியாக அவரவர்கள் வீடுகளில் செய்துகொள்ளட்டும்; பொது மக்களின் பொருளை லட்சக்கணக்கில்—அதுவும் 10 லட்சம் வரை விரயம் செய்வதென்றால், இதனை யார்தான் கண்டிக்காமல் இருக்க முடியும்?

நாட்டிலே மக்கள், ஒரு நேரங் கஞ்சியில்லாமல் கும்பல்கும்பலாக மாண்டுமடிகிறார்கள்; உடுத்த உடையில்லாமல் வாடையில் தவிக்கிறார்கள், குடியிருக்க குடிசையுமில்லாது குமுறுகின்றனர். நாட்டிலே தொழில் செய்ய வழியில்லாமல், தொழில் ஸ்தாபனங்களை நிறுவ போதிய செல்வமின்மையால், ஆயிரக்கணக்கான மக்கள் நாடு விட்டு நாடு சென்று மலைகளிலும் தோட்டங்களிலும் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி தவித்து நிற்கின்றனர். இந்த நிலையில், பாட்டாளி மக்களின் உழைப்பால் வந்த செல்வத்தை பணத்தை-நாட்டின் மூலதனத்தை இவ்வாறு அநியாயமாக விரயம் செய்யலாமா? இதை அனுமதித்துக் கொண்டுதானிருக்கலாமா? ஒருவன் தான் தேடிய பணம் தானே என்று, பணத்தை வீணாக அழித்தால், இதனால் அக்குடும்பத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும்? அதைப் போல இதையும் பொது மக்களோ சர்க்காரோ பார்த்துக்கொண்டிருக்கலாமா? இவ்வாறு பார்த்துக்கொண்டிருப்பதுதான நீதியா? நேர்மையா? இவ்வாறு ஒவ்வொருவரும் தான் தேடியபணம் தானே என்று ஒவ்வொருவரும் அழித்தால், நாட்டின் பொருளாதாரநிலை என்னவாகும். இதற்கும், இன்று ஹைதராபாத்தில் யாகத்தின் பெயரால், நாட்டின் செல்வமாகிய 10 லட்சம் ரூபாய் விரயம் செய்யப்படுவதற்கும் என்ன வித்தியாசம்?

நாட்டின் பொருளாதார நிலையிலும், மக்களின் பொது வாழ்விலும் அக்கறையுள்ள பொது மக்களும் சர்க்காரும் இத்தகைய காரியத்தை அனுமதித்துக்கொண்டிருக்கலாமா?

கடைசியாக இந்த யாகத்தில் ஒரு வேடிக்கையென்னவென்றால்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இந்த யாகம், உலக சமாதானத்திற்காகச் செய்யப்படுகிறதென்பதாகும். இவ்வாறு சொல்லிக் கொண்டால்தான், சர்க்கார் கள் மீது இத்தகைய நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள் என்பதைத் தவிர, இதில் ஏதாவது சிறிதாவது காரணம் இருக்க முடியுமா என்று எண்ணிப்பாருங்கள்.

இந்த யாகம் செய்வதினால், உண்மையிலே உலக சமாதானம் ஏற்படுமேயானால் அச்சக்தி அதற்கு இருக்குமானால்; இன்று உலகில், இவ்வளவு உயிர்கள் கொல்லப்படுவதற்கு முன், இவ்வளவு பொருள்கள் அழிக்கப்படுவதற்குமுன் நாடுகள் அல்லோல கல்லோலமாவதற்கு முன் உலக சமாதானத்திற்காக இந்த யாகத்தை ஏன் அன்றே செய்திருக்கப்படாது? அன்று இப்பார்ப்பனர்கள் யோக நிஷ்டையில் இருந்தார்களா? பரலோகம் போயிருந்தார்களா? உண்மையாகவே, இந்த யாகத்தினால் உலக சமாதானத்தை உண்டு பண்ணமுடியுமென்றால், என்றும் எப்போதும் உண்டு பண்ணக்கூடிய சக்தியைப்பெற்றிருக்க வேண்டுமல்லவா? இவர்கள் என்றாவது இதனைச் செய்து சமாதானத்தை நிலைநாட்டியிருக்கிறார்களா? இந்த 20வது நூற்றாண்டிலும் விஞ்ஞான வளர்ச்சி மிகுந்த காலத்திலும், இவர்களால்-இப்பார்ப்பனர்களால் இந்நாட்டு மக்களையும் பிரிட்டிஷ் சர்க்காரையும் ஏமாற்ற முடிகிறதென்றால், பயித்தியக்காரர்களாக்க முடிகிறதென்றால், அந்நாளில் எவ்வளவு தூரம் நம் முன்னோர்களை ஏய்த்துவந்திருக்க மாட்டார்கள் என்று எண்ணிப் பாருங்கள்.

உலக சமாதானம்! இத்தகை யாகத்தினாலோ, யோகத்தினாலோ, போகத்தினாலோ, ஏற்பட முடியும் என்று எந்த மடையனாவது எண்ணுவானா? அவ்வாறு ஒருவன் எண்ணுவானேயானால், அவனது மூளையை என்னென்று சொல்வது.

இத்தகைய யாகங்கள் வேதங்கள் காலந்தொட்டு நடந்து தானே வந்திருக்கவேண்டும். வேதங்கள் காலந்தொட்டு இன்று வரை என்றாவது உலகம் சமாதானத்திலிருந்து வந்திருக்கிறதா? இதற்கு எங்காவது ஆதாரம் உண்டா? இந்நாட்டுச் சரித்திரத்திலே, என்றும் எப்போதும் சமாதானம் இல்லை; என்றும் சண்டைகளும் சச்சரவுகளுமே நடந்துவந்திருக்கின்றன இதையே வரலாறுகள் அறிவிக்கின்றன. இதுவரை, சமாதானத்தை உண்டுபண்ண முடியாத யாகம், அல்லது சமாதானத்திற்காக செய்யப்படாத யாகம், இனி சமாதானத்தை உண்டு பண்ணுமென்றோ இது சமாதானத்திற்காகவே செய்யப்படுகிறதென்றோ எவராலும் கருதமுடியுமா? நம்ப முடியுமா?

மேலும், உலகம் சமாதானமில்லாமல் இருப்பதேன்? இதற்குக்காரணமென்ன? என்னசெய்தால் உலக சமாதானம் நிலைக்கும் என்பவற்றை ஆராயாமல், நாட்டிலே விறகு இல்லாமல் தவிக்கும் வேளையில், 104 குழிகளில் பல டன் விறகைப் பாழ்படுத்தி நெருப்பை வளர்த்து, மக்கள் ஒருவேளை நெய்யுக்கும் வழியில்லாமல் கஷ்டப்படுகையில் குடம்குடமாக நெய்யை பாழாக்கி, தானிய பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பஞ்சத்தால் மாண்டுமடிகிற வேளையில் மூட்டைமூட்டையாக தானியங்களை நாசமாக்கி வருவதை, இந்த நெருக்கடியான சமயத்தில் சர்க்காரார் யுத்தத்திற்கு மிகவும் தேவையான பொருள், பணம் ஆகியவைகளை வீண் செய்வதை எவ்வாறு அனுமதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ஐரோப்பாவில் ஆரியத்தை இன்றைய நிலைக்கு வளரவிட்ட பிரிட்டிஷ் சர்க்கார், இந்நாட்டிலும் ஆரியத்தை வளர்ப்பதைக்கண்டு யாரும் ஆச்சரியப்பட முடியாது. இது அவர்களுடைய 'பாலிஸி' இதை நாம் தவறு என்று சொல்ல வரவில்லை? ஆனால், நம் நாட்டில், நம் நாட்டின் நலனில் ஆர்வமுடையவர்களாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா என்று தான் கேட்கின்றோம்.

'உலகச் சமாதானம்' என்று வாயளவில் சொல்லிவிட்டால் போதுமா? உலகம் சமாதானம் இல்லாமல் ஏன் இருக்கிறது? இதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பகைமையைப் பற்றி மனது சிந்திப்பதினால் அப் பகைமையைத் தணித்துவிட முடியுமா? தணிந்து தான் விடுமா? அதுபோலவே, சமாதானம் வேண்டும் சமாதானம் ஏற்படவேண்டும் என்ற விருப்பம் மட்டுமிருந்தால் சமாதானம் ஏற்பட்டு விடுமா?

நிலை பெற்ற உலக சமாதானத்திற்கு உலகிலிருக்கும் எல்லா அரசாங்கங்களின் தன்மையிலும் அவ்வரசாங்கங்கள் அடிப்படையாகக் கொண்டிருக்கும் நோக்கங்களிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட வேண்டும்.

தனிச் செங்கோல் சுதந்திரமுடைய நாடு 'கடவுளா'ல் படைக்கப்பட்ட இந்நிலவுலகத்தில் தனக்கு விருப்பமானவைகளை எல்லாம் எப்பொழுதும் செய்யலாம்; அது தன்னைச் சுற்றி வரிச் சுவர்கள் கட்டிக்கொள்ளலாம். தொத்து வியாதிகளைப் பரவச் செய்யலாம்; மக்களைத் தாக்கலாம், அல்லது தனது குடிகளை ஒன்றுமற்றதாக்கலாம்; மற்ற நாட்டார் தன்னாட்டின் எல்லைக்குள் வருவதற்குத் தடைகளிடலாம்; குடிபுகுவதையும், குடிபோவதையும் தடுக்கலாம்; மற்றைய அயல் நாடுகளுடன் சம்பந்தமே வைத்துக்கொள்ளாமலிருக்கலாம்; இன்னும் இவை போன்றவைகளைச் செய்யலாம்; ஆனால் இந்த நாடு வேறு நாட்டுடன் சண்டை செய்வதில்லை என்று உறுதி மட்டும் கூறலாம். இந்தநிலை இருக்கும்வரை என்றாவது போர் நிகழாமல் இருக்க முடியுமா? இதுவரை, அதாவது இந்நிலைமையிலிருந்து எக்காலந்தொட்டு என்றாவது போர் நிகழாமல் இருந்திருக்கிறதா? என்று கேட்கிறோம்.

செங்கோல் தனிச்சுதந்திரமென்றாலே போருக்கு தயாராகுகிறோம் என்பதுதானே பொருள். கூட்டாட்சியின் கீழ் உலகிலுள்ள நாடுகள் ஒன்று சேராதவரை, உலகில் சமாதானம் நிலைக்காது. எந்த நாடாவது தனித்து அதாவது உலகக் கூட்டாட்சியை விட்டு விலகி தனி சுதந்திரமாக வாழ்வதாகச் சொல்வதென்பது, தன்னை அடுத்தப் போருக்கு தயார்செய்து கொள்வதாகத்தானே பொருள் கொள்ள வேண்டும். ஆக, செங்கோல் தனிச்சுதந்திரமென்று

இருக்கும்வரை சமாதானம் எங்ஙனம் நிலவ முடியும்?

உடன்படிக்கைகளினாலும், ஒப்பந்தங்களினாலும், சாசனங்களினாலும் உலக சமாதானத்தை ஒருபொழுதும் காணமுடியாது. உண்மையிலே உலக சமாதானம் ஏற்படவேண்டுமானால், உலகில் உள்ள வேற்றுமைகள் ஒழிக்கப்படவேண்டும்; ஒரு நாட்டானுக்கு இன்னொரு நாட்டில் தடையில்லாமல் வியாபாரம் முதலியன செய்ய உரிமையிருக்கவேண்டும்; ஒரு மனிதன், தற்பொழுது ஒருடன் சாமானை எடுத்துக்கொண்டு சென்னையிலிருந்து கல்கத்தாவிற்குப் போக முடிவது போன்று, சான்பிரான்சிஸ்கோவிலிருந்து நியூயார்க்கிற்குப் போகமுடிவது போன்று சென்னையிலிருந்து திருவிதாங்கூருக்கு, கார்டிப்பிடியிலிருந்து விலாடிவெஸ்டாக்கிற்கு பரிசோதனை, கண்காணிப்பு இல்லாமல் போகும்படி ஏற்பட்டால் அன்றி உலகசமாதானம் ஏற்பட முடியுமா? உலகில் எப்பகுதியிலும், ஒடுக்கப்பட்டவர்கள், அடக்கப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் இருக்கும்வரை, பிறவியின் காரணமாக உயர்வு, தாழ்வு, இழிவு போன்ற வேற்றுமைகள் இருக்கும் வரை, சுரண்டுகிறவனும், சுரண்டப்படுகிறவனும் இருக்கும் வரை சமாதானம் ஏற்படும் என்று எண்ணலாமா? சமாதானத்திற்கு இவ்வளவு இடையூறுகள் இருக்க, இவைகள் எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து ஆலோசிக்கவேண்டியிருக்க, எங்கோ ஒரு மூலையில் ஒரு சில பார்ப்பனர்கள் கூடி தீ வளர்த்து, இருக்கிற நெய்யையும் தானியங்களையும் பாழ்படுத்தி ஆடுகளைக் கொன்று புசிப்பதினால் சமாதானம் ஏற்பட்டுவிடுமா? இதை எந்தப் பகுத்தறிவு வாதியாவது—விஞ்ஞானியாவது ஒப்புக்கொள்வானா? இதைப் பிரிட்டிஷ் சர்க்காரார் அறியாமலிருக்கமுடியுமா? அறிந்தும் பிரிட்டிஷ் சர்க்கார் மௌனம் சாதித்து வருவது தான் மர்மமாகயிருக்கிறது. யுத்தம் ஆரம்பமானதிற்குப்பின், நாட்டிலுள்ள நெருக்கடியையும் மக்கள் உணவுக்கும் பொருளுக்கும் படும் கஷ்டத்தையும் கண்[illegible]ம், சர்க்காரார் இந்த யாகத்தைக்கண்டு வாளாயிருப்பார்களேயானால், இந்நாட்டில் ஆரியத் தீயை பிரிட்டிஷார் வளர்க்கிறார்கள் என்று எண்ணினால் குற்றமாகுமா?

சென்னை நகர திராவிடர் கழகம்

நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

நாளது 13-1-44 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு சரியாய் மேற்படி நிர்வாகக் கூட்டம், பெத்துநாயக்கன்பேட்டை லாயர் சின்னதம்பி தெரு, 4-A. எண்ணுள்ள மாடியில் நடைபெறும். அது சமயம் சென்ற கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களனைவரும், இதையே அழைப்பாகக்கருதி தவறாமல் வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

என். வி. என்., பொதுக்காரியதரிசி.

அறிவிப்பு

இவ்வாரம் நமது "குடி அரசு" திராவிட மாணவர் மலராக வெளிவருவதால், திராவிடர் நாட்டுக் கூட்ட நிகழ்ச்சிகளோ அறிக்கைகளோ இடம் பெற முடியாது போயிற்று. அடுத்த கிழமை முதல் தொடர்ந்து வெளியிடப்படும் என்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாடு

இந்த ஆண்டு மாநாடு கூட்ட ஏற்பாடுகள் செய்யவும் வரவேற்பு சமிட்டி நியமிக்கவும் 14-2-45ந் தேதி புதன் மாலை 6-மணிக்கு நாகம்மையார் திராவிட கழகத்தில் கூட்டம் நடக்கும்.

யாவரும் வருக.

தி. பொ வேதாசலம்,
அமைச்சர்.

பட்டுக்கோட்டை "திராவிடர் கழகம்"

கமிட்டிக் கூட்டம்

பட்டுக்கோட்டை "திராவிடர் கழக" கமிட்டிக் கூட்டம் நாளது 11-2-45 ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணிக்கு தோழர் கே. எஸ். சிவராமன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அது சமயம் கழக அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டுள்ள கணக்கு தணிக்கையும், வருகிற மார்ச்சுமாத முதல் வாரத்தில் செல்வம் நினைவு நாள் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்வது பற்றியும் முடிவு செய்யப்படும். எல்லா அங்கத்தினர்களும் இதனையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

—குறிப்பு:- இக்கூட்டத்திற்குப் பிறகு அதே இடத்தில் சுயமரியாதைச் சங்கக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அது சமயம் சுயமரியாதைச் சங்கக் கட்டிடம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைப் பற்றி முடிவு செய்யப்படும்.

திராவிட மாணவர் மண்டல மாநாடு

திராவிட மாணவர் வட மண்டல மாநாடு 18-2-45 காலை 9மணிக்கு ஞாயிறு திருச்சினாப்பள்ளி பொது நகர மண்டபத்தில் (Municpal Publio Hall) நடைபெறும்.

தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் பி. ஏ. அவர்கள் தலைமை வகிப்பார்.

பெரியார் இராமசாமி அவர்கள் திறந்து வைப்பார்.

குடந்தைத் தோழர் எஸ். தவமணி இராசன் அவர்கள் மாணவக் கொடியை ஏற்றுவிப்பார்.

மற்றும் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., புலவர் வி. அ. அரங்கசாமி, மாணவி சிவபாக்கியம், டி. பி. வேதாசலம், 10-வயது சிறுவன் வீரமணி மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

ஒலிபெருக்கி அமைப்பு உண்டு.

அனைவரும் அன்புடன் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

வரவேற்புக் கழகத்தார்.

ஆண்டு நிறைவு விழா

கோபிநாயகன்பட்டி ஸ்ரீ வன்னியப்ப நாடார் க்ஷத்திரிய வித்யா சாலையின் 23-வது ஆண்டு நிறைவு விழா 11-2-45ந் தேதி விருதுநகர் ராவ்பகதூர் எம். எஸ். பி. செந்திக்குமார நாடார் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

கிருஷ்ணகிரி "காரனேஷன் கிளப்" ஜெனரல்பாடி கூட்டமொன்று 11-12-44-ந் தேதி கூடிற்று. அதுசமயம் சென்ற வருடத் தலைவர் தோழர் சாமிதாஸ் நாடார் பி. ஏ., பி. எல்., காலஞ்சென்றதைக் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பின் தோழர்கள் கே. வி. குப்புசாமி பிள்ளை தலைவராகவும், சலால் சாகப் உபதலைவராகவும், பி. சி. பச்சையப்பன் காரியதரிசியாகவும், வெங்கிட கிருஷ்ணன் உபகாரியதரிசியாகவும், 3 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திராவிடரும் திருக்குறளும்

(சோ. இலக்குமிரதன் பாரதி எம்.ஏ.,பி.எல்.,)

முதலில் ஆங்கிலேய ஆட்சியின்பதவிகளில் பங்கு கேட்ட காங்கரசு இன்று வெள்ளையர் ஆட்சியை விரட்டி இந்திய முழு அரசுரிமையை விரும்பி நிற்கின்றது. பகுதியினர் உரிமைகளைப் காப்பதற்குத் 'தனித் தொகுதியும் போதிய பதவிகளும்' கேட்ட முஸ்லிம் லீக் இன்று "பாகிஸ்தான்" நாட்டுப் பிரிவினை நாடி நிற்கின்றது. அதுபோலவே பிறப்புரிமை பேசும் பார்ப்பனர் தென்னாட்டில் பதவிகளனைத்தையும் கொள்ளும் பிழை கடிந்து வகுப்பு விகிதம் பிரித்து வழங்கும் நலன்காட்டவிழைந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம் இன்று திராவிடநாட்டுப் பிரிவினை போற்றி நிற்கின்றது.

வெள்ளை நிறத்தவர் ஆட்சியை ஒழித்தல் திறமே, எனில் அவ்வாட்சியனைத்தையும் காங்கரசுக் கட்சியே கொள்ளுதல் அறமன்று. ஒருமொழி பேசும் ஓரின ஆங்கிலேய மக்களின் பிரதிநிதிகள் தம் பொது நலன்கள் பேண நடத்தும் பாராளுமன்றக் கட்சி ஆட்சியின் மாண்பில் மயங்கி, மெய்யுணராது, பண்டைத்துறையும், பிரித்தாளும் சூழ்ச்சியையும் கொண்டு அன்னவர் இந்தியாவை ஆளும் அரசொருமை எண்ணி, மொழியுங்கலையும் குணமும் பண்பும் வேறுபடுத்தும் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்குங்கொல் குறும்பும் மலிந்த பகுதிகளின் தொகுப்பான இந்தியாவை ஒருதேசமெனக் கொண்டு, குடியாட்சி நிறுவக் காங்காசே முனைந்தாலும் அது முடியாதென்றாகும்.

கூடி ஒன்றுபட்டு வாழமுடியாத வேற்றுமை உணர்ச்சிகளுடையவர்கள் ஓரினத்தவரேயாயினும் பிரிந்து வாழ்தல் முறையே, எனில் இந்தியமுஸ்லிம்கள் எல்லோரும் ஒருங்கே ஒரு இனத்தவர் அல்லது ஒரு தேசத்தவர் (Race or Nation) என்று சொல்வதற்கில்லை. ஒரு நாட்டிலும், ஒரு அரசின் குடிகளாகவும், பல இனத்தவரும் பல தேசத்தவர்களுமே வாழலாம். அமெரிக்காவிலும், கானடாவிலும், பல தேச மக்கள் இவ்வாறு குடியேறி இருக்கின்றார்கள். ஆனால் ஒரு இனத்து அல்லது ஒரு தேசத்து மக்கள் தமக்கு இயற்கையாக அமைந்த தக்க எல்லைகளையுடைய ஓர் நாட்டில் தம் நாகரிகத்திற்கேற்ப ஆட்சி நிறுவி வாழ்தலே சாலச்சிறந்ததாகும்.

எனவே இந்தியா முழுவதற்கும் காங்கிரஸ் அல்லது வேறு எந்தக் கட்சியினரின் குடியாட்சி முறை ஏற்படவேண்டுமென்றோ, அதின் ஒரு பகுதியை முஸ்லிம்களின் பெரும்பான்மை கருதிப் பிரித்து முஸ்லிம்கள் ஆட்சி ஏற்படுத்த வேண்டுமென்றோ இன்றியமையாச் சிறப்பும் நியாயமும் இல்லை.

ஆனால் சேரம் பண்டைக்கால முதல், மிகப் பழைய தனி நாகரிகச் சிறப்புடையவர்களென்பதை இன்றும் யாரும் மறக்கொணாத, திராவிடர்கள், தம்முள் ஒரு சிறிது, மொழி மதவேறுபாடுகள் உடையரேனும், மொழியும் சமயமும், ஒரு நாடுடைய ஓரினத்தவர், ஆட்சிமுறைக்கு ஊறு செய்யாமையன், இயற்கை வளங்களும் அரண்களுமுடைய தாம் வாழும் தென்னாடு போற்றித் தனி அரசாளும் தகுதியுடையரென்பதில் எவ்வித ஐயப்பாடும் எழுவதற்கிடமில்லை.

"யாதும் ஊரே, யாவருங்கேளிர்" என்ற விரிந்த கொள்கையும் பரந்த நோக்கமும் அகப்புற வாழ்க்கைகளில் பெருமையும் ஒருங்கமைந்த திராவிடர்கள், இன்று தென்னாட்டுப் பிரிவினையும் தனித் தன்னாட்சி முறையும் விரும்புவானேன்? தாம் வாழும் நாட்டைப் பிறர் கொள்ள அடிமை நிலை எய்தினர். நிலத்தின் தன்மைகளுக்கேற்ப, வகுத்து முறை செய்த, நாகரிக வாழ்க்கை பாழ்பட்டொழிந்தது. "பெயக்கண்டும் நஞ்சுண்டமையும் நயத்தக்க நாகரிகம் வேண்டும்" திராவிடர்கள் இன்று நலிந்து, தம்மோடு உண்டேனும், கொடுத்தேனும், கொண்டேனும், 'ஒட்டாத' ஆரியப் பார்ப்பனரை ஐயரென்றும், வெள்ளைப் பரங்கியரைத் துரையென்றும் புகழ்ந்து அவர் பின்சென்று, வாழும் நிலையெய்தி அந்நிலையையே கெட்டு ஒழியாமலும் நாமமது திராவிடரெனக் கொண்டு நடைப் பிணங்களாகத் திரிகின்றார்கள்.

இவ்விழிவான நிலைமை இவர்கள் எய்தியதேன்?
அதினின்றும் விடுபட்டு உய்வதெங்ஙனம்?

வள்ளுவர் குறட்பாக்களை பல்வேறு மொழிகளில் இயற்றி உலகம் போற்றுகின்றது. அத்தகைய புலவனைத்தோற்றுவித்து வான்புகழ் கொண்டது திராவிடநாடு. குறைந்தது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட அந்நூலை ஊன்றிப் பார்த்தால் நமது முற்பட்ட உயர் வாழ்க்கைக்கும் பிற்பட்ட தாழ் நிலைக்கும் ஏதுவாய் பல தக்க சான்றுகள் காணக் கிடைக்கின்றன. அக்காலம் ஆரிய நாகரிகம் திராவிடநாட்டில் புகுந்து மக்களை மருளச்செய்து, உயரிய திராவிடப் பண்புகள், கொள்கைகளோடு மோதி மொத்துண்டு, நிலைபெற முயன்ற காலமாய் இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. அதில் யாருக்கும் இளையாத திராவிடப் பெரியவரான வள்ளுவர், இருதிறக் கொள்கைகளின் திறங்களையும் சமன்செய்து சீர்தூக்கி அழகிய வடிவங்கள் கொண்டு திராவிடர் அழிவிற்குத் தோன்றிய புதிய ஆரிய நாகரிகப் படுகுழியில் ஆழ்ந்து அவர்கள் மடியாவண்ணம் எச்சரித்திருக்கிறார். அவற்றில் ஒரு சில மட்டும் இங்கு குறிப்பிடுதல் திராவிடர் பெரு நூலாகிய குறளை, மாணவர் இந்நோக்குடன் ஆராய்வதற்கும், திராவிடர் நாகரிக மறு மலர்ச்சியின் அவசியத்தை உணர்வதற்கும், ஒரு சிறிது பயன்படலாம்.

1. கல்வியும் அறிவும் மக்கள் ஆய்ந்து ஆய்ந்து, தேர்ந்து கொள்ளவேண்டிய எல்லை வரம்புகளற்ற புதை பொருள்களாதலின் "மறை" என்பதும், மாசறக் கற்று மெய்ப்பொருள் கண்டவர் சொற்களை 'மறை மொழி' என்பதும், ("நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரமென்ப"—தொல்) அம் மறைமொழிகள் அவரது நிறைக்கும் பெருமைக்கும் சான்றாகும் என்பதும், திராவிடர் துணிபு. "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்" (குறள் 28) இவ்வழியில் கல்வியும் அறிவும் மக்களிடை வளரும். "கல்விக் கரையில, கற்பவர் நாள்சில," ஆனால் முன்னும் இன்றும், பின்னும் கிடைக்கக் கூடிய சகலக் கலையும், அறிவும் கடவுளால் காண்பிக்கப் பட்டு வேதங்களாகப் போதிக்கப்பட்டனவென்றும், எல்லாம் அவற்றில் அடங்கியுள, அவற்றில் இல்லாத தெதுவுமில்லையென்றும் ஆரியர் கொண்டனர். இவ்வாறு திரட்டி உருட்டித் தந்த உரைகளை ஓதிஓதி மனதிற் பதித்து உருச் செய்வதும், அவ்வுரைகளையே மீண்டும் மீண்டும் பன்னிப்பன்னி விரித்து பொருளெல்லாம் தேடுவதும், சிலர் தம் பாதங்களை வளரவிடாமல் இருப்பு சட்டங்களை அணிந்து அழகு தேடுவதேயே நிகர்க்கும். இவ்வேதங்களை வள்ளுவர் 'ஒத்து' என்றும் அதை ஓதுபவரைப் பார்ப்பனர் என்றும், ஒழுக்கமற்ற பார்ப்பான் பிறப்புயர்வு இன்றி அழிவான் என்றும் எடுத்துச் சொல்லி 'மறை' 'மறையோன்' 'அந்தணர்' என்ற சொற்கள் அமையாமை காட்டினார்.

"மறப்பினும் ஒத்து கொளலாகும் பார்ப்பான் பிறப்பு
ஒழுக்கங் குன்றக்கெடும்"—134
"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மைபூண்டொழுகலான்"-36

2. வெள்ளையர் நாடுகளில் இன்று காரல்மார்க்ஸ் (Karl Marx) தொழில் தான் உண்மையான மதிப்பை, விலையை (Value)த் தருகிறது என்று காட்டினார், ஆனால் திராவிடர் அன்று

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முதல், தொழிலொன்றே வாழ்க்கையின் பெருமைக்கும் சிறப்புக்கும் அளவுகோல் என்ற கொள்கையினர். எனில் ஆரியரோ எவ்வகையான பொருத்தமும் பொறுப்புமற்ற பிறப்பே ஒருவன் உயர்விற்கும் தாழ்விற்கும் அறிகுறி என்ற விபரீதக் கொள்கையை புகுத்தினர். வள்ளுவர் இவ்வகையில் உலகினரை எச்சரித்தது கவனிக்கத்தக்கது. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்"—(972)

3. ஒழுக்கமும் தன்மானமும் திராவிடருக்கு உயிரினும் மிகையாக மதிக்கத்தக்க பொருள்கள். "இன்றியமையாச் சிறப்பின் வாயினுங்குன்ற வருப விடல்" (மானம் 961) என்ற கொள்கையில் ஊறியவர்கள். ஆரியருக்கோ ஆபத்திற்குப் பாவமில்லை என்பது தருமம்.

4. திராவிடருக்கு அன்பும் அருளும் தலைசிறந்த மக்கட் பண்புகளாகும். அகப்புற அறவாழ்க்கையிலன்றி அறமில்லை மாற்றாரைப் புறங்காணும் மறவாழ்க்கையினும் அன்பே அடிப்படை. "அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை"—76

என் "அன்பின் வழியது உயிர் நிலை," எனவே "நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை" (328) ஆரியருக்கோ மந்திரத்தாலும், தந்திரத்தாலும் பிற உயிரைக் கொன்று பலி தருவதாலும் வேண்டியவற்றைச் சாதித்துக் கொள்ளுதல் தருமம். "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்துண்ணாமை நன்று" —259) என்று வேதியர் வேள்விச்சாலைகளை எள்ளி இகழ்ந்தார் வள்ளுவர்.

(5) உழவையும், தொழிலையும், பெண்ணையும் போற்றினர் திராவிடரும் வள்ளுவரும். மக்கட்கு ஆக்கம் தரும் இவையெல்லாம் இழிவுபடுத்தி பிறப்பொன்றே பேணிக் கருதினர் ஆரியப் பார்ப்பனர். இவ்வழி மயங்கிய திராவிடர், பின்னர் உழவரையும் தொழிலாளிகளையும் பள்ளரென்றும், பறையரென்றும் இழிசொற்கள் சூட்டிப்பழித்து, வாழ்க்கையின் ஆக்கத்தைக் குலைத்துக் கெடுத்தொழிந்தனர். இப்பொழுது 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்' என்றும் 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றும் புதுப் பாடல்களை படிக்கவேண்டியதாய் இருக்கிறது. என்னே நம் பேதமை!

6. உலகம் (உயர்ந்தோர் அறிந்தோர்) பழித்தது ஒழிப்பது திராவிடர் கடன். திராவிடத்தாய் 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் 'சான்றோன் எனக் கேட்டு'. எனவே திராவிடன் 'ஈன்றாள் பசி காண்பானாயினும் சான்றோர் பழிக்கும் வினை' செய்ய ஒருப்படான். மூதாதையர், மனைவி, மக்கள் பசியால் வருந்தழி தீயபல செய்தேனும் அவரைக் காப்பாற்றுதல், ஆரியர் போற்றும் அறநெறி, இன்னும் இதப்ப ஒருவழி இளிவந்த செய்தாயினும் உய்க என்பது வடநூன்முறை'. அன்னார்க்கு 'மழித்தலும் நீட்டலும் போன்ற வெளி வேடங்களே' வாழ்க்கைக்குப் போதிய ஆசாரங்களாகும். உச்சிக்குடுமிக்கோர் உயர்வு.

7. இரத்தலினும் (யாசித்தல்) இழிவுடையதொன்று திராவிடர்க்கில்லையாகும். ஆரியப் பார்ப்பனர்க்கோ அது ஆறுதொழில்களில் ஒன்றாகிய அருங்கடன். "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்த தில்"—(1066) இவ்வழி நோக்கினால் வள்ளுவர் குறள் வாழ்க்கைப் பெருங் கடலில் பிறக்கும் இடர்களையும் இன்னல்களையும் கடந்து அறவழிகள் சென்று இன்பம் எய்துவதற்குச் சிறந்த வழிகளைக் காட்டும் கலங்கரை விளக்கமாகும்

வாழ்க்கையின் வளர்ச்சியைத் தடுத்துப் பாழ்செய்து அறமொவ்வா தீதக்கொள்கைகளை ஆரியர் திராவிடர் இடையே புகுத்தி, மக்களைக் கெடுத்து தாமும் கெட்டொழிந்தனரென்பதற்கு இந்தியாவின் இன்றைய நிலையே தகுந்த சான்றாகும். வள்ளுவருக்குப்பின் இப்புது நாகரிகம் விரைவில் திராவிடநாடெங்கும் பரவி நிலவியதை விளக்குவதற்கு சிலப்பதிகாரம் "நாடுகாண்காதை"யில் காணும் ஒரு சிறு சித்திரம் போதுமானது. அதில் உழைப்போர் விறலையும், அதன் பலனை இருந்துண்டு பிழைப்பவர் மாயத்திறனையும் அமைத்து அழகுறக் கூறுகிறார் இளங்கோவடிகள்.

"உழைப்புலிக் கொடித்தேர்
உரவோன் கொற்றமொடு
மழைக் கருவுயிர்க்கும்
அழல் திகழ் அட்டில்-
மறை யோராக்கிய
ஆவுதி நறும் புகை
இறைஉயர் மாடமெங்கணும்
போர்த்து
மஞ்சு சூழ் மலையில்
மாணத் தோன்றும்
மங்கல *மறையோர்
இருக்கை யன்றியும்;
பரப்பு நீர்க்காவிரிப்
பாவை தன் புதல்வர்
இரப்போர் சுற்றமும்
புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்,
பழவிறலூர்களும்,
பொங்கழி ஆலைப் புகையொடும்
பரந்து
மங்குல் வானத்து
மலையிற் தோன்றும்
ஊரிடையிட்ட நாடுடன்"........

* மறையோர்-அரசர் ஆகியவர்கள்

திருப்பத்தூரில் திருமணமும், திராவிட முழக்கமும்

(நமது நிருபர்)

திருப்பத்தூர் (வ. ஆ.) ஜன. 29- நேற்று முற்பகல் 10 மணிக்கு 'ஸ்டார் ஜோட்டோ ஸ்டுடியோ' உரிமையாளர் தோழர் கோ. வெங்கடாசலத்திற்கும், தோழர் இலட்சுமிக்கும், 'திராவிட நாடு' ஆசிரியர் தோழர் அண்ணாதுரை தலைமையில் திருத்திய திருமணம் நடைபெற்றது. தோழர் சா. கஜேந்திரன் உள்ளிட்ட பல தோழர்கள் மணமக்களுக்கு மாலைகளணிவித்தார்கள். பரிசுகள் வழங்கப்பட்டன. தோழர்கள் ஜி. சாமிநாயுடு பி. ஏ., பி. எல்., பி. பெரியசாமி பி. ஏ., பி. எல்., தவமணிராசன், ஈரோடு மாணிக்கவாசகம், போளூர் சுப்பிரமணியம் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றிய பின்னர் தலைவர் நீண்ட தம்முடைய முடிவுரைப் பிரசங்கத்தைச் செய்தார்.

மாலை 6-15 மணிக்கு உயர்நிலைப் பள்ளி வெளியில் தோழர் ஜி. சாமிநாயுடு பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் திராவிடர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திராவிட மாணவர் கழகத்தார் தோழர் சி. என். அண்ணாதுரைக்கு வரவேற்புரை வாசித்தளித்தனர். தோழர்கள் மாணிக்கவாசகம் போளூர் சுப்பிரமணியம், தவமணி இராசன், சி. என். அண்ணாதுரை எம். ஏ., கஜேந்திரன் பி. ஏ., ஆகிய தோழர்கள் 'திராவிட மக்கள் கல்வி நிலை,' 'சமுதாய சீர்திருத்தம்' எனும் பொருள் பற்றி அமைவுற சொற்பெருக்காற்றினார்கள். ஒரு காங்கிரஸ் மாணவர் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த முறையில் தோழர் அண்ணாதுரை பதிலளித்தார். திராவிடர் கழகத்தில் பெருவாரியான அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

வடார்க்காடு ஜில்லா திராவிடர் கழகம் அமைக்க பிப்ரவரி 25-ந் தேதி தோழர் ஜி. சாமிநாயுடு அவர்கள் இல்லத்தில் கூட்டம் நடத்தப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

43. 'இவ்வுலகில் அவர்களை எவ்வளவு பாதுகாப்புடன் வைத்திருந்தாலும், அவர்களுக்கு ஆண்களிடமுள்ள ஆசையினாலும், அவர்களது நிலையற்ற தன்மையாலும் இயற்கையாகவே அவர்களுக்கு உள்ளமில்லாததாலும், தங்கள் கணவர்களிடம் விசுவாசமற்றவர்களாய் இருப்பார்கள்'

மனு 9-15

44. 'உலகம் தோன்றியது முதல் பெண்கள் நிலைமை குறைந்தது'

'பெண்கள் தாமரை இலை தண்ணீர்போல் சஞ்சலபுத்தியுடையவர்கள், வாள் போல் கூர்மையான கொடுமைத்தன்மையுடையவர்கள், புயலைப் போல் நிலையற்றவர்கள்'

ராமாயணம் ஆரண்யகாண்டம் 13-5, 6.

45. 'பெண்களின் முகங்கள் பூக்களைப் போன்றவைகள்; அவர்கள் மொழிகள் தேன் போன்றவைகள்; அவர்களது உள்ளம் கூர்மையான கத்தியின் கூர்மையைப் போல் கெடுதி செய்யக்கூடியது; அவர்களது உள்ளத்தின் ஆழத்தை அறிந்தவர் யாருமில்லை'

(இராமாயணத்திற்குப் பிந்திய காவியங்களில்)

46. 'ஒரு பெண்ணால் உண்மையாக நேசிக்கப்படுகிறவர் யாருமிருக்க முடியாது'

47. 'ஒரு பெண் தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு தனது கணவனையோ, குழந்தைகளையோ, சகோதரர்களையோ யாரை வேண்டுமானாலும் கொலை செய்யத் தயங்கமாட்டாள்'

48. 'பெண்கள் இரக்கமில்லாமல் புலிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள், கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், இழிவுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்'

—பாகவதகல்பதரு,

4-14, 42 9-14-36.

49. 'பெண்கள் நிலையற்ற சுபாவமுடையவர்கள்; அவர்கள் குற்றமுள்ளவர்கள்'

மனு

50. 'பெண் இனத்திற்கே, கீழ்க்கண்ட 8 குணங்களும் உரிமையானவைகள்: பொய், நிலையின்மை, வஞ்சகம், முட்டாள்தனம், பேராசை, மாசு, கொடுமை, அடுக்குத்தனம்'

சுக்ரர், 3-163

51. 'பெண்கள் தவறு செய்தால், மூங்கில் பட்டையினாலோ, கயிற்றினாலோ, கையினாலோ பெண்களின் வாயின்—உதட்டின் மீது அடிகள் கொடுக்கலாம்'

அர்த்தசாஸ்திரம், 3-3-59

52. 'ஒரு மனைவி தப்பிதம் செய்தால், கயிற்றினாலோ, மூங்கில் விளாறினாலோ அடிக்கலாம்'

மனு, 8-299

53. 'சமுதாயத்திற்கு அவர்கள் (பெண்கள்) கேடானவர்கள்-அபாயமானவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களைக் கொன்றுவிடலாம்'

54. 'உலகத்தையே விழுங்க எண்ணிய மந்தரா என்ற பெண்ணை சுக்ர கொன்றிருக்கிறார்'

55. 'உலகம் தூங்கக்கூடாது என்று விரும்பியதற்காக காவ்யமாதா என்ற பெண் விஷ்ணு கையினால் கொல்லப்பட்டாள்'

56. 'ஆச்சிரமங்களில் செய்யப்பட்ட யாகங்களை-சடங்குகளை தடுத்ததற்காக தாடகை என்ற பெண்ணை ராமன் கொன்றிருக்கிறான்'

ராமாயணம் 25-17

57. 'குடும்பத்தில் பெண் பிறந்தால், அச்சம்பவம், மகிழ்ச்சிக்குரியதல்ல, வருந்துவதற்குரியது—வியாகூலப்பட வேண்டியது'

58. 'அதர்வணவேதத்தில் ஆண் மக்களை விரும்புகிறதே யல்லாது பெண் மக்களை விரும்புகிறதில்லை'

59. 'பெண் மகவு வேறு எங்கேயாவது பிறக்கட்டும், இங்கே ஆண்மகவு பிறக்கட்டும்'

அதர்வணவேதம், 6-2-3

60. 'புத்ர கடவுளை வணங்குவதில் ஆண்மகவே பிறக்கட்டும், பெண் மகவு வேண்டாம் என்று கூறப்பட்டிருக்கிறது'

ஷை 8 6-25.

61. 'பெண் குழந்தைகள் சாக வேண்டியவர்கள்'

—காதக-சம்ஹிதா (27. a)

62. 'ஆனால் இரு பக்கத்திலும், கன்னிகை கல்யாணம் செய்து கொடுப்பதினால் தொடர்பற்றதாக இறந்தவளாகக் கருதப்படுகிறது'

(புத்தகாசிரியர்)

63. 'யுத்தத்தில் எதிரிகளிடமிருந்து பிடிபட்ட பெண்களோ அல்லது விவாக சம்பந்தமாக கட்டாயப்படுத்தப்பட்டவர்களோ இவர்களில் எவரையும் மனிதப் பிறவி என்று கருதாமல் கட்டுமட்டு சாமான்களைப் போலவே நடத்த வேண்டும்'

(ரிக்வேதத்தைக் குறித்து எழுதிய பிரபல ஆசிரியரான டாக்டர் அபினாஷ் சந்திரதாஸ் கூறுகிறார்)

64. 'இதை இதிகாசங்கள் காலத்திலும் காணலாம். அதாவது, பஞ்சபாண்டவர்களின் மனைவியாகிய துரோபதியை யுதிர்ஷ்டிரன் சகுனியுடன் சூதாடும்போது பணையமாக வைத்தான்' (ஷை)

65. 'யாரும் கேட்காமலே, தனது மனைவியையும், தான் மதிக்கும் எல்லாவற்றையும் ராஜ்ய உரிமையையும் தாமாகவே பரதனுக்கு அதுவும் சந்தோஷமாக கொடுப்பதாக ராமன் வாயால் சொல்லும்படி வால்மீகி எழுதியிருக்கிறார்.'

(ராமாயணம் 2-19-714)

66. 'அந்நாளில் மனைவி ஒரு சாமானைவிட மேலாக மதிக்கப்படவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணங்கள் வேண்டும் (புத்தகாசிரியர்)

67. 'ஒரு சூதாடுபவன் தனது மனைவியைப் விட்டுப் பிரிய மனம் தாங்காமல் வருந்துகிறான். தனது மனைவி அழகாகயிருப்பதனால்மட்டுமல்ல, பிரியமாயிருப்பதினால்மட்டுமல்ல, அவள் உற்ற தோழியாகவும் சிறந்த ஊழியளாக வுமிருப்பதினால்'

ரிக்வேதம் 10-34-2, 4

68. 'சூதாட்டத்தில் தனது கவனம் அதிகமாக ஈடுபட்டிருக்கையில், மற்றவர்கள் தங்கள் கைகளை தனது மனைவியின்மீது போடுகிறார்கள் என்று அந்த சூதாடி பிறிதொரு இடத்தில் கூறுகிறான்' (ஷை)

69. 'அந்நாளில் (பண்டைய நாளில்) மனைவியின் நிலைமை ஒரு அடிமையின் நிலைமையைவிட நல்லநிலைமை என்று சொல்லுவதற்கில்லை' (ஷை)

70. 'பெண்ணின் நேசம் ஒரு பொழுதும் நிலையானதல்ல, அவளுடைய மனம் கழுதைப்புலியினது போன்றது'

ரிக்வேதம், 10-95-15

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தமிழர் திருநாள்

திருச்சி: திருச்சி தமிழ்க் கழகங்கள் மையத்தின் ஆதரவில் நடைபெறும் தமிழ் வார விழாவின் முதல் கூட்டம் 14-1-45ந் தேதி, நகர மண்டபத்தில் திருச்சி நகர கண்காணிப்பாளர் (கமிஷனர்) தோழர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் விழாவை ஆரம்பித்துவைத்தார்.

தமிழாசிரியர் தோழர் பரிமேலழகர் "திருக்குறளும் கருப்பொருளும்" என்ற பொருள் பற்றிப் பேசினார். தோழர் 'சோமு' மூன்றுலகத்து நல்லோசைகள் என்பதைப் பற்றிப் பேசினார். கடைசியாகப் பேசிய தமிழாசிரியர் தோழர் ஐயன்பெருமாள் கோனார் 'தமிழ் மறுமலர்ச்சி' என்பது பற்றிப் பேசுகையில், கம்பராமாயணம் முதலிய புராணக் கதைகள் பொய்யாகவேயிருந்தாலும் கருத்திற்காகவும், காவியத்திற்காகவும் அவைகளைக் காப்பாற்றவேண்டுமென்று குறிப்பிட்டார்.

தலைவர் தமது முடிவுரையில், தமிழில் தோன்றிய பழம் புராணங்களே தமிழர்களின் அறிவை வளர ஒட்டாது தடுத்து அடிமை மனப்பான்மையை வளர்த்தது என்றும், மனிதன் மனிதனாக விளங்கவேண்டுமானால் அவைகளை மறந்து விடுதலே தகுதியாகுமென்றும் யாவரும் உணரும்படி தெளிவாக விளக்கிக் கூறினார்.

தோழர் முனுசாமிப் பிள்ளை நகைச்சுவை ததும்ப திருக்குறளின் நயங்களை எடுத்துரைத்தார்.

தோழர் கு. விசுவநாதம் நன்றி கூறக் கூட்டம் முடிந்தது.

* *

சிறுகனூர்: 14-1-45-ந் தேதி தோழர் ரா. இரங்கசாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அ. ரெங்கசாமி, எஸ். எம். மணியன் முதலியவர்கள் பாடின பிறகு மாணவத் தோழர்கள் டி. சி. எஸ். மணியன், எம். இலக்குவன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

பெண்ணாகடம்: சிவகுருநாதன் கழகம், கடந்தைத் தமிழ்ச் சங்கம் இவைகளின் சார்பில் "பொங்கல் திருநாள்" தோழர் சுப்பிரமணியம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் முருகேசன், சிவப்பிரகாசன், வடிவேலு, சிவராம சேது, பழமலை முதலியவர்கள் 'தமிழரும் தமிழர் திருநாளும்' என்பது பற்றிப் பேசினார்கள்.

* *

மன்னைச்சநல்லூர்: 14-1-45-ந்தேதி மாலை, பெரியார் படம் சைக்கிளில் வைத்து ஊர்வலமாக தோழர் ராமநாதன் [illegible]மையில் எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலம் 7-30 மணிக்கு சிவன் கோயில் மைதானத்தைப் போய் அடைந்தது. தோழர் இ. மாணிக்கம் பொங்கல் ஊர்வலத்தை விளக்கினார்.

* *

ஒடாக்கநல்லூர்: 16-1-45-ஆந் தேதி வெள்ளியக்குடி தோழர் முருகேசன் அவர்கள் தலைமையில் "தமிழர் திருநாள்" கொண்டாடப்பட்டது. அண்ணாமலைப்பல்கலைக் கழக மாணவத் தோழர்கள் பொன்மன்றம், குப்புசாமி முதலியவர்கள் 'தமிழர் நாகரீகம்', 'தமிழர் கடமை' என்பது பற்றிப் பேசினார்கள். மறைந்த தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், 'பொங்கல் வாழ்த்து இதழ்' அனுப்பிய தோழர் பூ. கணேசன் பி. ஏ., (ஆனர்ஸ்) அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

கோயமுத்தூர்: அகம்படிய வாலிப சங்கத்தின் ஆதரவில் 14-1-45-ல் தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் தலைமையில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

* *

சென்னை: தமிழ் ராஜ்ய கட்சியினரால் 14-1-45-ல் தோழர் கே. சி. சுப்ரமண்யசெட்டியார் தலைமையில், 'பொங்கல் நாள்' கொண்டாடப்பட்டது. தோழர் டி. எம். பாலகிருஷ்ணம் பிள்ளையும் அவரது கோஷ்டியாரும் இனிய பாட்டுகளால் மகிழ்வித்தார்கள்.

* *

திண்டிவனம்: வழக்கறிஞர் தோழர் வீ. கோபாலக் கவுண்டர் பி. ஏ. அவர்கள் தலைமையில் 'பொங்கல் விழா' 14-1-45-ந் தேதி கொண்டாடப்பட்டது. தோழர்கள் கோ. ஆதிகேசவன், ச. இராமமூர்த்தி, நா. வெங்கிடேசன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

கல்வார்பட்டி: பொங்கல் விழா 14-1-45-ந் தேதி தோழர் மாரியப்பன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பெரிய ஊர்வலம் ஒன்று நடந்தது. ஊர்வலம் தா. ரா. கடைக்கு முன்னுள்ள மைதானத்தை அடைந்தது. தோழர் வீரராசன் 'தமிழ் திருநாள்' பற்றி விளக்கிப் பேசினார்.

* *

சென்னை: முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் புலவர் தோழர் மயிலை சிவ முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் 14-1-45-ந் தேதி பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. செல்லத்தாண்டவன், அன்பு கணபதி, ம. இராசமாணிக்கம், ஆறுமுகம், மா. குமாரசாமி, மா. சம்பந்தன் ஆகியோர் பேசினார்கள்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பு:-

இந்து மதத்தில் (ஆரியதர்மத்தில்) அவர்களது வேத சாஸ்திர புராண இதிகாசங்களில் காணப்படுபவைகளிலிருந்து பொறுக்கியெடுத்த சில குறிப்புகளாகும் இவை. இனியும் இதுபோலவும் இன்னும் மோசமாகவும் எவ்வளவோ குறிப்புகள் வேறு பல ஆதாரங்களில் இருக்கின்றன.

பொதுவாக எல்லா மதங்களும் பெண்களைச் சிறிதாவது தாழ்மையாகத் தான் மதிக்கின்றன. வடநாட்டில் பெண்கள் எல்லா மதத்தாராலும் பெரிதும் மறைபொருளாகவே கருதப்படுகிறார்கள். ப-ர்

தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களின் பொங்கல் வாழ்த்துரையும் இதர வாழ்த்துச் செய்திகளும் வாசிக்கப்பட்டன.

* *

நுங்கம்பாக்கம்: இவ்வூர் திராவிடர் கழகத்தினரால் 'பொங்கல் விழா' பச்சையப்பன் கல்லூரி மாணவத் தோழர் இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் நவநீதன், செல்வராசன், சுந்தரமூர்த்தி, பார்த்தசாரதி, திருவேங்கடம், நாராயணன் முதலியோர் 'பொங்கல் புதுநாள்' என்பது பற்றிப் பேசினார்கள்.

* *

அமைந்தகரை: திராவிடர் கல்வி வளர்ச்சிக்கழகத்தின் ஆதரவில் 13-1-45ல் தோழர் ஆ. ஏழுமலை அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. சிறுவர் சிறுமிகட்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. தோழர்கள் சங்கரதாம், கண்ணன், துரைராஜ், கழக மாணவன் பாலசுந்தரம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan [illegible] 42, [illegible] Street, Erode.